202

உ

ஓம் தத்ஸத்பிரஹ்மணே நம:

# ஸ்ரீபிரஹ்மாநந்தக் கட்டளை

இஃது

தஞ்சை ஸ்ரீபிரஹ்மநிஷ்டபண்டித

வி. குப்புஸ்வாமி மஹாராஜ் என்னும்

ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகள்

மாணாக்கர்

ஸ்ரீ சுப்பராய சுவாமிகளால்

இயற்றப்பட்டு

ஷை ஸ்ரீபிரஹ்மாநந்த ஸ்வாமிகள் மாணாக்கர்

ஸ்ரீ து. நாகசுவாமி சிரக்கோரவ்

(பென்ஷன் சப் ரிஜிஸ்திரார்) அவர்கள்

இயற்றிய குறிப்புரையுடன்

ஷையூர் மகர்நோம்புச்சாவடி பாவுக்காரத் தெரு

மகா-ா-ா-ஸ்ரீ ம. உலகநாதபிள்ளையவர்களால்

தஞ்சை

ஸ்ரீ சங்கர விலாச சாரதாமந்திரப் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

All Rights Reserved.

விலை] 1928 விபவ வு ஆவணி மீ [அணா 2.

ACC NO 39245

உ

ஓம் தத்ஸத்பிரஹ்மணே நம:

# ஸ்ரீபிரஹ்மாநந்தக் கட்டளை

இஃது

தஞ்சை ஸ்ரீபிரஹ்மநிஷ்டபண்டித
வி. குப்புஸ்வாமி மஹாராஜ் என்னும்
**ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகள்**
மாணுக்கர்
**ஸ்ரீ சுப்பாராய சுவாமிகளால்**
இயற்றப்பட்டு
ஷை ஸ்ரீபிரஹ்மாநந்த ஸ்வாமிகள் மாணுக்கர்
**ஸ்ரீ து. நாகாசுவாமி சிர்க்கோராவ்**
(பென்ஷன் சப் ரிஜிஸ்திரார்) அவர்கள்
இயற்றிய குறிப்புரையுடன்
ஷையூர் மகர்நோம்புச்சாவடி பாவுக்காரத் தெரு
**மகா-ள-ள-ஸ்ரீ ம. உலகநாதபிள்ளையவர்களால்**
தஞ்சை
ஸ்ரீ சங்கர விலாச சாரதாமந்திரப் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

*All Rights Reserved.*

விலை] 1928 விபவ௵ ஆவணி௴ [அணா 2.

11-1

உ

சிவமயம்.

ஸ்ரீ பிரஹ்மாநந்தாய நம:

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 39245

# முகவுரை

இவ்வுலகின் கண் சகலஜீவர்களும் [illegible]ய வர்களாயிருத்தலால் எல்லோருக்கும் சர்வதுக்க நிவர்த்தியிலும் பரமாநந்தப்பிராப்தியிலுமே இச்சையுண்டாகின்றது. ஆனால் அச்சம்சார துக்கம் மணி மந்திர ஔஷதாதிகளால் கடிகை, நாழிகை, மாதம் வருடம் முதலியனவாக நியமிக்கப்பட்ட சொற்பகாலம் வரையில் நீங்குகிறது. மீண்டும் அதே துக்கமாவது வேறு துக்கமாவது வந்து பொருந்துகின்றதே யொழிய அத்தியந்தம் நீங்குகிறதில்லை. ஏனெனின் "ஆத்மாவை அறிந்தவன் சோகத்தைக் கடக்கின்றான்" என்னும் சுருதிவாக்கியப்படி ஆத்மஞானமே சர்வதுக்க நிவர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியுமாகிய மோக்ஷத்திற்கு சாதனமாகின்றது. அந்த ஞானம் வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிடதம் அதன் அநுசாரியாகிய கிரந்தங்களை விசாரித்தலால் உண்டாகிறது. அப்படிப்பட்ட விரிந்த வேதாந்த நூற்களை அப்பியசிக்கத் தொடங்குவோருக்கு ஆரம்பத்தில் உபயோகப்படுமாறு தஞ்சை பிரஹ்மநிஷ்ட பண்டித வி. குப்புஸ்வாமி மஹாராஜ் என்னும் பூர்வாசிரம நாமம்பூண்டிருந்த ஸ்ரீபிரஹ்மாநந்த ஸ்வாமிகள் மாணாக்கர் தஞ்சைமாநகர் மகர்நோம்புச் சாவடி முதல்நம்பர் ரோட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீபிரஹ்மாநந்த சுவாமிகள் மடாலயத்தின் டிரஸ்டியும்

# முகவுரை.

போதகாசாரியருமாகிய ஸ்ரீ **சுப்பராய சுவாமிகளால்** இந்நூல் எளிய நடையில் இயற்றப்பெற்று இதற்கு தஞ்சாவூர் கோட்டை வடக்குவீதி கணேஜி சிர்க்கே கோட்டிலிருக்கும் ஷை பிரஹ்மாநந்த சுவாமிகள் மாணாக்கரில் ஒருவராகிய பென்ஷன் சப்ரிஜிஸ்திரார், **கு. நாகசுவாமி சிர்க்கோராவ்** அவர்களால் குறிப்புரையும் எழுதப்பட்டது. இந்நூலிலும் உரையிலும் சொற் குற்றம், பொருட்குற்றங்களிருப்பின் பெரியோர்கள் திருத்திப்படித்துக்கொள்வதுடன் நூலாசிரியருக்கு, தயவு செய்து எடுத்துக்காட்டினால் அவற்றை மிக நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் திருத்தி அச்சிடப்படும். இந்நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவிய ஷை யூர் மகர்நோம்புச்சாவடி பாவுக்காரத் தெருவிலிருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ **ம. உலகநாத பிள்ளை** அவர்களின் நன்றி மறக்கத்தக்கதன்று. இப்புத்தகம் ஷையாரிடத்தும், தஞ்சை மகர்நோம்புச்சாவடி முதல் நம்பர் ரோட் ஸ்ரீபிரஹ்மாநந்த சுவாமிகள் மடாலயத்திலும் கிடைக்கும்.

கு. நா.

சிவமயம்.

ஸ்ரீ பிரஹ்மாநந்தாய நம:

# *ஸ்ரீபிரஹ்மாநந்தக்கட்டளை.

## மங்கலம்.

சத்திய ஞான நந்தத் தற்பத விலட்சி யார்த்த
சுத்தமாம் பிரமந் தானுந் துலங்குமென் நிஜசொ ரூப
தத்துவந் தானு மாகத் தயங்கிய பிரமா நந்த
வித்தகத் தேசிகேசன் விரைமலர்த் தாள்கள் போற்றி.

## நூல்.

‡ அநாதி † பிரஹ்ம சொரூபத்தில் அக்கினியிற்சூடு

---

* இந்நூலாசிரியர் தன் ஆசிரியர் பிரஹ்மாநந்தசுவாமிகள் பெயரால் இந்நூல்விளங்கவேண்டி இப்பெயர் கொடுத்தனர்.

‡ அநாதி = ஆதியில்லாதது; எதற்கு உற்பத்தி உண்டோ அதற்கு நாசமுமுண்டு; பிரஹ்மத்திற்கு உற்பத்தி இன்மையால் நாசமுமில்லை. ஆதலால் பிரஹ்மம் உற்பத்தி நாசமின்றிய தென்பார்அநாதி என்றார். † பிரஹ்மம் = பெரிதுக்கெல்லாம் பெரிதா யுள்ளது; அதாவது தன்னை

போல ‡ அபின்னமாக ஒரு § சக்தியுண்டு. அதற்கு || சிற்சக்தி என்றுபெயர். அந்த சக்தி அவ் ¶ வதீதப் பிரஹ்மத்தி லடங்கி யிருக்கும்போது அதற்குச் $ சுத்தப்பிரஹ்ம மென்று பெயர். இந்தச் சக்தி விசிரிம்பித்து (வெளிப்பட்டு) நிற்கும்போது இந்தச் சக்திக்குப் பராசக்தி என்று பெயர். இந்தப் பராசக்தியுடன் பிரஹ்மம் கூடிநின்றபோது அப் பராசக்தியின் வியாபகத்திற்குள் ளிருந்தபடியால் அதற்குப் பரப்பிரஹ்மமென்று பெயர். இந்தச் சக்திக்குப் பிரஹ்மத்தினுடைய சந்நிதானத்தில், புருஷ சமுகத்தில் ஸ்திரீக்கு இன்பஞ் ஜனித்தாற்போல அவி

---

விடப் பெரிதில்லாதது. இதைத் தத்துவ மென்றும், வஸ்து வென்றும், சிவமென்றும் கூறுவர். ‡ அபின்னமாக = வேறுபடாததாக. § சக்தி = சாமர்த்தியம்; ஆற்றல்; வல்லமை. || சிற்சக்தி = ஞான (அறிவு) வடிவசக்தி. ¶ அதீதம் = மனவாக்கிற்கு எட்டாதது அல்லது பிரபஞ்சத்தைக்கடந்தது. $ சுத்தம் = மாயாசம்பந்தமற்றது; சகஜம், ஆகந்துகம் என்னும் இருவகை மலமுமின்றியது. சகஜம் = செம்பிற்களிம்புபோல இயற்கையாம். ஆகந்துகம் = நீரிற்பாசிபோலச் செயற்கையாம்.

கிருத (பிரிபடாத) சத்துவ ரஜோ தமோ குணங்க ளுண்டாயின. இந்தச் சுத்த சத்துவத்திற்கு ஆநந்த ரூபசக்தி யென்று பெயர். சுத்த ரஜசிற்குச் சித் ரூபசக்தி யென்று பெயர். சுத்த தமசிற்கு சத் ரூபசக்தி யென்று பெயர். இவற்றுள் காரண சரீரமாகிய ஆநந்தரூப சக்தியுடனே பரப்பிரஹ் மங்கூடிச் சர்வாநந்த மென்னுஞ் சுழுத்தி யவஸ் தையை யடைகிறபோது அதற்குப் பரப்பிரஹ்ம மென்கிற பெயர், போய்ப் பரமாநந்த ரென்கிற பெயர் வந்தது. இந்தப் பரமாநந்தர் சூக்ஷ்ம சரீர மாகிய சித்ரூப சக்தியுடன் கூடிச் சர்வப் பிர காச மென்னுஞ் சொப்பனாவஸ்தையை யடையும் போது அவருக்குப் பரமாநந்தரென்கிற பெயர் போய்த் தேஜோமயரென்னும் பெயர் வந்தது. இந்தத் தேஜோமயர் ஸ்தூல சரீரமாகிய சத்ரூப சக்தியுடனே கூடிச் சர்வ வியாபகமென்னுஞ் ஜாக் கிராவஸ்தையை யடையும்போது தேஜோமய ரென் னும் பெயர் போய்ப் பரிபூர ணரென்னும் பெயர் வந்தது.

## 2. மூலப்பிரகிருதி நிருபணம்.

இந்த *அகண்ட † பரிபூரண ‡ சச்சிதாநந்தப் பிரஹ்மத்தின் ஏகதேசத்தில் பழுதையிற் பாம்பு போலும், கிளிஞ்சிலில் வெள்ளிபோலும், கான

*அகண்டம் = தேசகாலவஸ்துக்களாற் கண்டிக்கப் படாதது. எந்தப்பொருள் எங்கும் வியாபகமாகாது யாதானும் ஓரிடத்திருப்பதாகின்றதோ அதற்குத் தேசத்தினால் அந்தமுண்டாகின்றது. குடம் எங்கும் வியாபகமாகாது யாதானும் ஓரிடத்திருக்கின்ற தாகலின் அது தேசத்தான் அந்தமுடையதாகின்றது. பிரஹ்மம் யாதானும் ஓரிடத்திருப்பதன்று, எங்கும் வியாபகமாம், எல்லாவிடமும் பிரஹ்மத்தில் மாயையினால் கற்பிக்கப்பட்டதாம். ஆதலால் பிரஹ்மத்திற்குத் தேசத்தினால் அந்தமின்று.

எப்பொருள் பிறப்பிற்கு முன்னும் அழிவிற்குப் பின்னும் இல்லாதிருக்கின்றதோ அது காலத்தினால் அந்தமுடையதாம். உடல் முதற்பொருள்கள் பிறப்பிற்கு முன்னும் அழிவிற்குப் பின்னும் இல்லாதிருக்கின்றன. ஆதலால் அவை காலத்தினால் அந்தமுடையனவாம். பிரஹ்மம் பிறப்பிறப்பில்லாததா யிருத்தலால் நித்தியமாம். எதனால் நித்தியமோ, அதனால் அது காலத்தினால் அந்தமுடையதன்று.

லில் ஜலம்போலும், பின்னமாய் (வேறாய்) § அனிர்வசனீயமாக ¶ மூலப்பிரகிருதி யென்னும் ஒருசக்தி

---

எந்தப்பொருளுக்குப் பிறபொருளோடு பேதமிருக்கின்றதோ, அது வஸ்துவினால் அந்தமுடையதாம். கடத்திற்கு வஸ்திரத்தோடு பேதமிருத்தலால் கடத்திற்கு வஸ்திரமாகியவஸ்துவினால் அந்தம் சொல்லப்படுகின்றது. பிரஹ்மத்தில் ஜடசேதனங்களாகிய சர்வவஸ்துக்களும் கற்பிதமாம். எது எதன்கண் கற்பிதமோ அது அதன் சொரூபமேயாம். மண்ணிற் கற்பிக்கப்பட்ட குடம் மண்ணின் சொரூபமும், பொன்னிற்கற்பிக்கப்பட்ட குண்டலம் முதலியன பொன்னின் சொரூபமுமேயாம். அதுபோல சகலவஸ்துக்களும் பிரஹ்மத்தில் கற்பிதமாகலான் அவை பிரஹ்மசொரூபமாம். இதனானே பிரஹ்மம் சர்வாத்மாவாம். பிரஹ்மம் சர்வாத்மாவாயிருத்தலால் பிரஹ்மத்திற்கு ஒரு வஸ்துவினோடும் பேதமில்லை. எதனால் பிரஹ்மத்தில் ஒரு வஸ்துவினோடும் பேதமில்லையோ அதனால் பிரஹ்மத்திற்கு ஒரு வஸ்துவினாலும் கண்டமில்லை. இவ்வாற்றால் பிரஹ்மம் தேசகால வஸ்துக்களாலாகிய கண்டமில்லாததாம். ஆகலின் அகண்டமாம். † பரிபூரணம் = கடத்தில் மண்போலும், பூஷணத்தில் பொன்போலும், பிரபஞ்சத்தில் நிறைந்து அப்பாலுமிருப்பது. ‡ சச்சிதாநந்தம் = சத்து, சித்து, ஆநந்தம்; முக்காலத்திலும் கெடாதிருப்பது சத்து, குன்றாத பிரகாசம் (ஞானம்)சித்து; குறைவுநிறைவற்ற இன்பவடிவம் ஆநந்தம்

யுண்டு. இந்த சக்திக்கு ♆ ஜடசக்தி யென்று பெயர். இந்தச் சக்தியும் விகிருத (வேறுபட்ட) சத்துவ ரஜோ தமோ குணங்களுடனே கூடி இருக்கும்.

### 3. ஈசுவர நிரூபணம்.

அந்தப் பிரகிருதியின் சத்துவகுணம் * மாயை யென்றும் † சர்வஞ்ஞவுபாதி யென்றும் ‡ ஈசுவர காரணசரீர மென்றுஞ் சொல்லப்படும். இந்த மாயை யினிடத்திலே நிர்மலஜலப் பிரதிபிம்பம்போலப் பிர

---

§ அநிர்வசனீயம் = சத்தென்றுவது அசத்தென்று வது சொல்லமுடியாதது. ¶ மூலப் பிரகிருதி = மூலம் = ஜகத்திற்கு முதற்காரணம்; பிர = சத்துவம்; கிரு = ராஜசம் தி = தாமசம். இவை மூன்றுகுணங் களின் சாம்மிய (பிரிபடாத) அவஸ்தை. ♆ ஜட சக்தி = தன்னையும் பிறவற்றையும் அறியாதது.

* மாயை = சிந்திக்கக்கூடாத சக்தியுள்ளதாயும். யுக்தியில் அடங்காததாயு மிருப்பது மாயையாம். எது வாஸ்தவத்தி லில்லையோ அது மாயை † சர்வஞ்ஞ வுபாதி = சர்வஞ்ஞத்தவ முதலிய சக்திகள் தோன் றற்குக் காரணமாயிருத்தலின். ‡ ஈசுவரகாரண சரீரம் = ஈசுவரப்பிரதிபிம்பம் உண்டாவதற்கும் ஹிரண்ணியகருப் பம் அவ்வியாகிருதம் உண்டாவதற்கும் காரணமாயிருத்த லின்.

ஹ்மம் § சலக்ஷணமாகப் பிரதிபிம்பிக்கும். இந்த பிரதிபிம்ப சைதன்யம் ஈசுவரனென்று சொல்லப் படும். இந்த ஈசுவரன் சுத்த சத்துவ மாயாவடிவ வுபாதியுடையவனுதலால் || சர்வஞ்ஞனும் சர்வசக்தி சம்பன்னனும் தனது சுத்தப்பிரஹ்ம சொரூபத்தின்

---

§ சலக்ஷணம் = சச்சிதாநந்தாதி லக்ஷணங்களோடு.

|| சர்வஞ்ஞன் என்றபடியால் சர்வஞ்ஞத்துவம், சர்வே சுவரத்துவம் சர்வ நியந்திருத்துவம், சர்வாந்தரியாமித்து வம், சர்வகர்த்திருத்துவம், சர்வசக்தித்துவ மென்னும் ஆறு குணங்களையும் உடையான் என்பது பெறப்பட்டது.

1. சர்வஞ்ஞத்துவம் = முக்காலத்தும் மாறின்றி யெல்லாவற்றையு மறிதல்.

2. சர்வேசுவரத்துவம் = சகலபிரபஞ்சத்திற்கும் தலை வரா யிருத்தல்.

3. சர்வநியந்திருத்துவம் = எப்பொருள்களையும் நியமந் தவருவாறு செய்தல்.

4. சர்வாந்தரியாமித்துவம் = எப்பொருளிலும் உள்ளீ டாய் நிறைந்திருத்தல்.

5. சர்வகர்த்திருத்துவம் = சகலகாரியங்களுக்கும் கர்த்தாவா யிருத்தல்.

6. சர்வசக்தித்துவம் = எல்லாச் சாமர்த்தியமுமுடைத் தாயிருத்தல்.

¶ ஆவரணமில்லாதவனும் அம்மாயையினைத் தன் அதீனத்தில் வைத்திருப்பவனும் ஆகின்றான். இவனுக்குக் § காரணப் பிரஹ்மமென்று பெயர். இந்த சத்துவகுண மாயையினிடத்திலே, சத்துவத்திற் சத்துவம், சத்துவத்தில் ரஜசு, சத்துவத்தில் தமசு என்று மூன்றுகுணங்கள் உண்டு. அவற்றுள் 1. சத்துவத்திற் சத்துவம் பிரதானமாகும்போது (மேற்பட்டு நிற்கும்போது) அதிற் பிரதிபிம்

---

¶ ஆவரணமில்லாதவன் = ஈசுவரனது காரண சரீரமாகிய மாயை களங்கமற்றதாயிருப்பதால் பிரதிபிம்பமாகிய ஈசுவரனுக்குப் பிம்பவடிவமாகிய தனது நிஜவடிவ பிரஹ்மத்தை கிஞ்சித்தும் மறைக்கிறதில்லை, ஆதலால் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவனாயிருத்தலின் இயற்கை முத்தனாவன்.

§ காரணப்பிரஹ்மம் = உலகத்திற்கு அபின்ன நிமித்த உபாதான காரணனாயிருத்தலின். எப்படியெனில் சிலந்திப் பூச்சியானது ஜடவடிவத்தனது சரீரப்பிரதானத்தால் நூலுக்கு முதற்காரணமாயும் புத்திவடிவ சேதனப் பிரதானத்தால் நிமித்தகாரணமாயு மிருத்தல்போல் ஈசுவரனும் தனது சரீரவடிவமாயையின் ஜடப்பிரதானத்தால் முதற்காரணனும் சேதனப்பிரதானத்தால் நிமித்தகாரணனுமாகின்றான்.

பித்த ஈசுவரன் ஜகத்தை ரக்ஷித்தலினால் விஷ்ணு
வென்றும் 2. சத்துவத்தில் ரஜசு பிரதானமாகும்
போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் ஜகத்
தைச் சிருட்டித்தலால் பிரஹ்மாவென்றும் 3. சத்
துவத்தில் தமசு பிரதானமாகும்போது அதிற்
பிரதிபிம்பித்த ஈசுவரன் ஜகத்தை சங்கரித்தலால்
உருத்திரனென்றுஞ் சொல்லப்படுவன். இம்மூவ
களுக்கும் *காரியப் பிரஹ்மமென்று பெயர். மாயை
யிற் பிரதிபிம்பசைதன்னியம், மாயை, மாயைக்
கதிஷ்டான பிம்பசைதன்னியம் இந்த மூன்றின்
சமுதாயமே ஈசுவரனது சொரூபம். இப்படி மூலப்
பிரகிருதியின் சத்துவகுண கற்பனை சொல்லப்பட்
டது.

## 4. ஜீவ நிரூபணம்.

இனி மூலப்பிரகிருதியின் ரஜோகுணம் அநேக
ரூபமாய்ப் பிரிந்து ஒன்றிற்கொன்று தாரதம்மிய
(ஏற்றத் தாழ்வு) உள்ளவைகளாயிருக்கும். அவை

---

* காரியப்பிரஹ்மம் = சர்வஞ்ஞனாகிய ஈசுவரனிடத்தினின்று தோற்றியபடியாலும் சிருஷ்டியாதிகாரியங்களைச் செய்கின்றபடியாலும் காரியப் பிரஹ்மமென்பர்.

களுக்கு * அவித்தைகளென்றும் † ஜீவகாரணசரீரங்களென்றும் பெயர். இந்த அவித்தைகளிடத்திலும் மலின ஜலப் பிரதிபிம்பம்போலப் பிரஹ்ம சைதன்னியம் பிரதிபிம்பிக்கும். இந்த பிரதிபிம்ப சைதன்னியங்கள் ஜீவர்கள் என்று சொல்லப்படுவர். இந்த ஜீவர்கள் மலின சத்துவப் பிரதான அவித்யா வடிவ உபாதியுடையவ ராதலால் ‡ அற்பஞ்ஞரும் அற்ப சக்தியுடையவரும், தனது சுத்தப் பிரஹ்ம சொரூபத்தின் ஆவரணமுடையவரும் அவித்தையின் அதீனமுடையவரும் ஆகின்றார். இவர்களுக்குச் சிதாபாச ரென்றும் பிராஞ்ஞ ரென்றும் பெயர்.

அவ்வீசுவர சேதனத்திலும் ஜீவ சேதனத்திலும் சொரூபமாக சர்வஞ்ஞத்துவம் அற்பஞ்ஞத்துவம்

---

* அவித்தை = வித்தையால் (ஞானத்தால்) நாசமாவது. அல்லது தேகமே ஆத்மாவென்கிற அபிமானத்தை எது உண்டுபண்ணுகிறதோ அதுவே அவித்தை. † ஜீவகாரண சரீரம் = ஜீவன் பிரதிபலித்தற்கும் ஸ்தூல சூக்ஷ்ம சரீரம் உற்பத்தி யாவதற்கும் காரணமா யிருத்தலின். ‡ அற்பஞ்ஞர் = சொற்ப அறிவுடையவர்.

முதலிய தர்மங் (தன்மை)களின்றும். என்றாலும் எங்ஙனம் உண்மையில் குறைவு அதிகமென்னும் தன்மையின்றிய ஆகாசத்தில் கடம் மடம் முதலிய சிறிய பெரிய உபாதிகளின் சம்பந்தத்தால் சிறிது பெரிதுகளாகிய பாவப்பிரதீதி யுண்டாகின்றதோ, அங்ஙனமே அச்சேதனத்திலும் மாயா அவித்தியாவடிவ உபாதிகளின் சம்பந்தத்தால் அச் சர்வஞ்ஞத்துவ அற்பஞ்ஞத்துவ தர்மங்கள் தோற்றுகின்றன. சொரூபமாக அவ்விருவரும் சச்சிதாநந்தவடிவரே யாவர். இந்த அவித்தைக ளிடத்திலேயும், ரஜசில் சத்வம், ரஜசில் ரஜசு, ரஜசில் தமசு என்று மூன்று குணங்களுண்டு. ரஜசில் சத்துவம் பிரதானமாகும்பொழுது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் தத்துவஞ்ஞானநிஷ்டராவர். ரஜசில் ரஜசு பிரதானமாகும்பொழுது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் காமக்குரோதபரராய்க் கருமநிஷ்டராவர். ரஜசில் தமசு பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் சோம்பல் நித்திரை மயக்கங்களையுடையவராவர். அவித்தையிற் பிரதிபிம்ப சைதன்னியம், (ஆபாசன்) அவித்தை, அவித்தைக்கு அதிஷ்டான

பிரஹ்ம சைதன்னியம் இவை மூன்றின் சமுதாயமே ஜீவனது சொரூபம். இப்படி மூலப் பிரகிருதியின் ரஜோகுண கற்பனை சொல்லப்பட்டது.

## 5. ஆவரண சக்தி நிரூபணம்.

இனி மூலப்பிரகிருதியின் தமோகுணத்திற்கு * ஆவரணம் § விக்ஷேபம் என்று இரண்டுசக்திகளுண்டு. அவற்றுள் ஆவரண சக்தியானது தத்துவ ஞானியையும் ஈசுவரனையுந்தவிர மற்றைய ஜீவர்களுக்குத் தனது நிஜ சொரூபமாகிய பிரஹ்ம சொரூபத்தைத் தானென்று அறியவொட்டாமல் மறைக்கும் இதனால் மறைபட்ட ஜீவர்கள் அஞ்ஞானிகளாய் ஜனன மரணத்திற் கட்டுப்பட்டு துன்புறுவர். இப்படி ஆவரணசக்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

## 6. ஜகத்துற்பத்தி. நிரூபணம்.

இனி விக்ஷேபசக்தியினின்றும் சப்தகுணத்தோடு கூடிய ஆகாசம் தோன்றிற்று. இந்த ஆகாசத்தினின்

* ஆவரணம் — மறைப்பு வடிவசக்தி. § விக்ஷேபம் = தோற்ற வடிவசக்தி.

றும் பரிசகுணத்தோடுகூடிய வாயுதோன்றிற்று, இந்தவாயுவினின்றும் உருவகுணத்தோடுகூடிய தேயு தோன்றிற்று. இந்தத் தேயுவினின்றும் இரசகுணத்தோடுகூடிய அப்புதோன்றிற்று. இந்த அப்புவினின்றும் கந்தகுணத்தோடுகூடிய பிருதிவி தோன்றிற்று. இந்தப் பிருதிவியைப்பார்க்கிலும் பத்துமடங்கு பெரியதும் சூக்ஷமமுமானது அப்பு. அப்புவைப்பார்க்கிலும் பத்துமடங்கு பெரியதும் சூக்ஷமமுமானது தேயு. தேயுவைப்பார்க்கிலும் பத்துமடங்கு பெரியதும் சூக்ஷமமுமானது வாயு. வாயுவைப் பார்க்கிலும் பத்துமடங்கு பெரியதும் சூக்ஷமமுமானது ஆகாயம். ஆகாயத்தைவிட அநேகமடங்குபெரிதும் சூக்ஷமமுமானது விக்ஷேப சக்தி, இந்தசூக்ஷம பஞ்சபூததத்திற்குக்காரணமாக விருக்கின்ற விக்ஷேபசக்தியினிடத்தில் தாமதத்தில் சத்துவம், தாமதத்தில்இராஜசம், தாமதத்தில் தாமதம் என்று மூன்று குணங்களுண்டு. இதனால் இதன் காரியமாகிய பஞ்ச பூதங்களும் முக்குணங்களுடனே பிறந்தன. இதனால் இப்பூதங்களுக்கு முக்குண பூதங்களென்றும் * தன்மாத்திரைகளென்

* தன்மாத்திரை = தன் தன் குணங்களுடன் மாத்திரம்

றும் ‡ அபஞ்சீகிருத பூதங்களென்றும் || சூக்ஷ்ம பூதங்களென்றும் பெயர்.

## 7. அந்தக்கரண நிரூபணம்.

ஆகாசாதி பஞ்சபூதங்களினுடைய சத்துவாம்சத்திலே பூதத்திற் கொவ்வொரு மாத்திரையெடுத்து சமஷ்டியாக [ஒன்றாகக்கூட்டி] வைத்தது அந்தக்கரணம். (உட்கருவி) இந்த அந்தக்கரணத்தில் ஆகாசத்தின் அம்சம் கூடினதற்கடையாளம் இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போல சகல வியவகாரங்களையும் தரித்துக்கொள்ளுகிறது. அப்படித் தரிக்கின்ற விருத்திக்கு உள்ளமென்றும் தேஜசு என்றும் பெயர். இந்த அந்தக்கரணத்தில் வாயுவின் அம்சம் கூடினதற்கு அடையாளம் இந்த அந்தக்கரணம் வாயுவைப்போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அக்கினியின் அம்சம் கூடினதற்கு அடை

---

கூடியிருத்தலால் தன்மாத்திரைகளென்றும், ‡ அபஞ்சீகிருத = பஞ்சீகிருதம் செய்யப்படாதது, || சூக்ஷ்ம = இந்திரியங்களுக்கு புலப்படாதது.

யாளம் இந்த அந்தக்கரணம் அக்கினியைப் போல இது இன்னதென்ன விளக்குவிக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தியென்றுபெயர். இந்த அந்தக்கரணத்தில் அப்புவின் அம்சம் கூடினதற்கு அடையாளம் இந்தஅந்தக்கரணம் அப்புவைப் போல விடயங்களைப்பற்றி இழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் பிருதிவியினம்சம் கூடினதற்கு அடையாளம் இந்த அந்தக்கரணம் பிருதிவியைப்போலக் கடினமாகநின்று அபிமானிக்கின்றது. இப்படி அபிமானிக்கின்ற விருத்திக்கு அகங்காரமென்று பெயர். இவ்வைந்து தத்துவங்களின் சமுதாயத்திற்கு அந்தக்கரணமென்றுபெயர். இவற்றுள் முதலில் மனம் இந்திரிய வாயிலாக வெளிப்பட்டு விஷயங்களைப்பற்றி ஐயுறும். அதன்பின்னர் புத்தியானது சந்தேகத்தையொழித்து அப்பொருளை இன்னதென்று நிச்சயிக்கும். அதன் பின்னர் சித்தமானது நிச்சயித்த பொருளைச் சிந்திக்கும். அதன் பின்னர் அகங்காரமானது சிந்தித்த பொருளை யான் எனதென்று அபிமானிக்கும். அதன் பின்னர் உள்ள

மானது இவ்வெல்லா வியவகாரங்களையும் தன்னிடத்தில் தரித்துக்(தாரணைசெய்து)கொள்ளுகிறது. இவற்றுள் மனதின் தேவதை சந்திரன், புத்தியின் தேவதை பிரமன் சித்தத்தின் தேவதை வாசுதேவன், அகங்காரத்தின் தேவதை உருத்திரன். இத்தேவதைகளின் அநுக்கிரகத்தால் இவ்வந்தக்கரணம் பிரவிர்த்திக்கின்றது.

## 8. ஞானேந்திரிய நிரூபணம்.

ஆகாசாதி பஞ்ச பூதங்களின் சத்துவாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்துத் தனித்தனியே [வியஷ்டியாக] வைத்தது ஞானேந்திரியம். இவற்றுள் சுரோத்திரம் ஆகாசத்தின் அம்சமானபடியால் ஆகாசத்தின் குணமான சப்த மாத்திரத்தை யறியும். துவக்கு வாயுவின் அம்சமானபடியால் வாயுவின் குணமான பரிச மாத்திரத்தை யறியும், சக்ஷு அக்கினியின் அம்சமானபடியால் அக்கினியின் குணமான உருவ மாத்திரத்தை யறியும். ஜிங்குவை அப்புவின் அம்சமானபடியால் அப்புவின் குணமான ரசமாத்திரத்தை யறி

யும். ஆக்கிராணம் பிருதிவியின் அம்சமானபடி யால் பிருதிவியின் குணமான கந்த மாத்திரத்தை யறியும். இவற்றுள் சுரோத்திரேந்திரியத்திற்குத் தேவதை திக்குப்பாலகர், துவக்கிந்திரியத்திற்குத் தேவதை வாயு, சக்ஷு இந்திரியத்திற்கு தேவதை சூரியன், ஜிஹ்வேந்திரியத்திற்கு தேவதை வருணன், கிராணேந்திரியத்திற்குத் தேவதை அசுவினி குமாரர். இத் தேவதைகளின் அநுக்கிரகத்தால் இவ்விந்திரியங்கள் தத்தம் காரியத்தில் பிரவிர்த்திக் கின்றன. இவைகள் தனித்தனியே இருக்கிறபடி யால் ஒன்று மற்றொன்றின் குணங்களை யறியாது. அந்தக்கரணத்தில் ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க் கலந்திருப்பதால் அது ஐந்து இந்திரியத்தாலும் ஐந்து விஷயங்களையும் அறியும். இந்த அந்தக்கரணம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும் ஆகபத்தும் சத்துவாம்சமானபடியால் ஞானசாதனமாயின.

## 9. வாயு நிரூபணம்.

ஆகாசாதி பஞ்ச பூதங்களின் இராஜதாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து சமஷ்டி

யாக [ஒன்றாகக் கூட்டி] வைத்தது வியானாதி பஞ்ச வாயுக்க ளெனப்படுகின்றன. அவற்றுள் வியான வாயு ஆகாசத்தின் அம்சமானபடியால் ஆகாசம் போல் சர்வ சரீரமும் வியாபித்துச் சரீரத்தைத் தாங்குகின்றது. பிராணவாயு வாயுவின் அம்சமான படியால் வாயுவைப்போல் ஹிருதயஸ்தானத்திலிருந்து நாசிபரியந்தம் அலைகிறது. அபானவாயு அக்கினியின் அம்சமானபடியால் அக்கினியைப்போல ஜாடராக்கினியாக ஜொலித்து குதஸ்தானத்தினின்று அன்னபானாதிகளை ஜீரணிப்பிக்கிறது. சமானவாயு அப்புவின் அம்சமானபடியால் அப்புவைப்போல சரீர நடுவான நாபிஸ்தானத்தினின்று அன்னபானாதிகளை சகல நாடிகளிலும் நிரப்பிவிக்கிறது. உதான வாயு பிருதிவியின் அம்சமானபடியால் பிருதிவியைப் போல கடினமாகக் கண்டத்தினின்று அன்னஜலங்களைத் திருகி [கடைந்து] உள்ளே செலுத்துகிறது. இந்தப் பஞ்சவாயுக்களையுமல்லாமல் வாந்தி பண்ணுவிக்கிறது நாகனென்றும், இமைத்து விழிப்பிக்கின்றது கூர்மனென்றும் குரு குருத்துத்தும்முவிக்கின்றது, கிரிகரனென்றும் கொட்டாவிகொள்ளச் செய்

கிறது, தேவதத்தனென்றும்விங்குவிக்கிறது தனஞ்செயனென்றும் வேறு ஐந்துவாயுக்களுண்டென்று சிலர் கூறுவர். இவ்வைந்தும் பிராணவாயுவின் தொழிலேயன்றி வேறல்ல.

## 10 கர்மேந்திரிய நிரூபணம்.

ஆகாசாதி பஞ்சபூதங்களின் இராஜதாம்சத்தில் பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்துவியஷ்டியாக (தனித்தனியே) வைத்தது கர்மேந்திரியங்களாம். அவற்றுள் வாக்கு ஆகாசத்தின் அம்சமானபடியால் ஆகாசத்தினிடமாய் நின்று வசனிக்கும். பாணி வாயுவின் அம்சமானபடியால் வாயுவினிடமாய் நின்று கொடுக்கல் வாங்கல் செய்யும், பாதம் அக்கினியின் அம்சமானபடியால் அக்கினியிடமாக நின்று நடக்கும், பாயுரு அப்புவின் அம்சமானபடியால் மலஜலாதிகளை வெளியே தள்ளும். உபஸ்தம் பிருதிவியின் அம்சமானபடியால் சுகத்தை உண்டுபண்ணும். இவற்றுள் வாக்கிந்திரியத்திற்குத் தேவதை அக்கினி. பாணீந்திரியத்திற்குத் தேவதை இந்திரன். பாதேந்திரியத்திற்குத் தேவதை வாமனர்,

பாயுரிந்திரியத்திற்கு தேவதை இயமன், உபஸ்தேந்திரியத்திற்குத் தேவதை பிரஜாபதி. இத்தேவதைகளின் அநுக்கிரகத்தால் இவ்விந்திரியங்கள் தத்தம் காரியத்தில் பிரவிர்த்திக்கின்றன இவ்வைந்தும், ஒன்றோடொன்று கூடாதபடியினல் ஒன்று மற்றென்றின் தொழிலைச் செய்யாது. வாயுவில் ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க்கூடினது கொண்டு கர்மேந்திரியம் ஐந்தின் வாயிலாக ஐந்து தொழிலையும் செய்து முடிக்கும். இந்த வாயுக்கள் ஐந்தும் கர்மேந்திரியமைந்தும் ஆகப்பத்தும் கர்மசாதனமாகையால் தொழிற்கருவிகளாம். அந்தக்கரணமைந்தும் ஞானேந்திரியமைந்தும் வாயுக்களைந்தும் கர்மேந்திரியமைந்தும் ஆக இருபது தத்துவங்களும் சூக்ஷ்ம சரீரமென்று சொல்லப்படும். இந்த சூக்ஷ்மசரீரமும் அவித்தையாகிய காரணசரீரமும், மரணத்தின் பின்னர் புண்ணிய பாப கர்மங்களின் வசத்தால் கீழ்மேல் உலகங்களிற் செல்லுகின்றன. மோக்ஷபரியந்தமிருக்கின்றன. தத்துவஞானம் ஒன்றினலேயே நாசமாகின்றன. வேறோர் உபாயத்தால் நாசமடையா. இதை மாயாப்பிரதிபிம்பனுகிய ஈசுவரன் அவித்தி

யாப்பிரதி பிம்பரான ஜீவர்களுக்கு பெயருக்கு ஒவ்வொரு சரீரம் சிருட்டித்துக் கொடுத்தார். இந்த சூக்ஷமசரீராபிமானமுள்ள ஜீவர்களுக்கு தைஜசன் என்று பெயர்.

## 11. தூலபூத உற்பத்தி நிரூபணம்.

ஆகாசாதி பஞ்சபூதங்களின் தமோகுண அம்சங்களைந்தையும் இரண்டு இரண்டாகப்பகுத்து அவற்றுள் ஒரு பாதியை ஒவ்வொன்றையும் நந்நான்காகப் பகுத்து இரண்டாம்பாகமைந்தனுள் தன் அம்சத்தோடு கூட்டாமல் ஏனைய நான்கு பூதங்களுடனும் அரைக்கால் அரைக்கால் பாகமாகச் சேர்ப்பது பஞ்சீகரணம் என்று சொல்லப்படும். இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின மாத்திரத்தில் இந்த சூட்சுமபூதங்கள் பால் தயிராகத் தடித்ததுபோல தடித்து ஸ்தூல பஞ்சபூதங்களாயின. இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூலபூதங்களிலே ஆகாசத்தில் பரிசரூபரசகந்தமாகிய நான்கு குணங்களும் வியாப்பியமான படியால் (வெளிப்படாது அடங்கி இருக்கின்றபடியால்) அதிரிசியமாகப்போக (இந்திரியங்களுக்குவிஷ

யமாகாமற்போக) தன் நிஜகுணமாகிய சத்த குண த்தோடு மாத்திரம் விளங்கி நின்றது. வாயுவில் ரூப ரசகந்தமாகிய மூன்று குணமும் வியாப்பியமானபடி யால் அதிர்சியமாய்ப்போக காரணகுணமாகிய சப் தத்துடனும் தனது நிஜகுணமாகிய பரிசத்துடனும் விளங்கி நின்றது. அக்கினியில் ரசகந்தமாகிய இர ண்டு குணமும் வியாப்பியமானபடியால் அதிர்சிய மாய்ப்போக காரணகுணமாகிய சப்த பரிசத்துட னும் தனது நிஜகுணமாகிய ரூபத்துடனும் விளங்கி நின்றது. அப்புவில் கந்தகுணம் வியாப்பியமானபடி யால் அதிர்சியமாய்ப்போக காரணகுணமாகிய சப்த பரிச ரூபத்துடனும் தனது நிஜகுணமாகிய ரசகுண த்துடனும் விளங்கி நின்றது பிருதிவி தனது காரண குணமாகிய சப்தபரிசரூபரசகுணத்தோடு தனது நிஜகுணமாகிய கந்தகுணத்தோடும் விளங்கி நின்றது.

## 12. ஸ்தூல சரீர உற்பத்தி நிருபணம்.

சூக்ஷ்மபூதங்களினின்றுஞ் சூக்ஷ்மசரீரங்களை சிரு ஷ்டித்தாற்போல பஞ்சீகரணம் பண்ணின தூலபூதங் களினின்றும் ஆறு தத்துவமாய், நால் வகையோனி

யாய் (பிறப்பிடமாய்) மூவகைச்சாதியாய் எழுவகைத்தோற்றமாயுள்ள தூலசரீரங்களைச் சிருஷ்டித்து பெயருக்கு ஒவ்வொரு சரீரமாகக் கொடுத்தார்.

ஆறு தத்துவமாவன:— (க) சர்மம் (தோல்) (உ) உதிரம் (இரத்தம்) (ங) மாமிசம் (சதை) (ச) சநாயு (நரம்பு) (ரு) அஸ்தி (எலும்பு) (சு) மஜ்ஜை (மூளை) என்பனவாம்

நால்வகை யோனியாவன (பிறப்பிடமாவன):— (க) ஜராயுஜம் (கருப்பையிற் றோன்றுவது) (உ) அண்டஜம் (முட்டையிற் றோன்றுவது) (ங) சுவேதஜம் (வேர்வையிற் றோன்றுவது) (ச) உற்பிஜ்ஜம் (மேற்பிளந்து தோன்றுவது) என்பனவாம்.

(க) கருப்பையிற் றோன்றுவன:- தேவர், மக்கள், முதலியன.

(உ) முட்டையிற் றோன்றுவன:— முதலை, ஓந்தி, அரணை, புள், உடும்பு, பல்லி, நண்டு, மீன், தவளை, ஆமை, நாகம், சிப்பி.

(ங) வேர்வையிற் றோன்றுவன:— பேன், புழு, மூட்டுப்பூச்சி, உண்ணி முதலியன.

(௪) மேற்பிளந்து தோன்றுவன:— மரம், கொடி, செடி, முதலியன.

மூவகைச் சாதியாவன:—

(௧) இகலோகபரலோக புத்தி இரண்டையுங் கொடுக்கிற மானுட சரீரம் உத்தம ஜாதி.

(௨) பரலோக புத்தியை மறைத்து இகலோக புத்தியை மாத்திரங் கொடுக்கின்ற பசு பக்ஷி முதலிய சரீரம் மத்திம ஜாதி.

(௩) இரண்டு லோகத்துப் புத்தியையுமறைத்திருக்கிற மரம் கொடி செடி முதலிய சரீரம் அதம ஜாதி.

எழுவகைத்தோற்றமாவன:—

(௧) தேவர் (௨) மனிதர் (௩) விலங்கு (௪) பறவை (௫) ஊர்வன (௬) நீர்வாழ்வன (௭) தாவரம்

இந்த ஆறு தத்துவமாயிருக்கின்ற தூலசரீரத்திலே இருபது தத்துவமாயிருக்கின்ற சூக்ஷமசரீரமிருக்கின்ற தெப்படியெனின்,

(அந்தக்கரணங்கள் ஐந்தின் ஸ்தானம்.)

உச்சியில் உள்ளமும் (தேஜசு), கண்டத்தில் மனமும், இருதயத்தில் புத்தியும், நாபியில் சித்தமும், சர்வாங்கத்திலும் அகங்காரமும் இருக்கின்றன.

(ஞானேந்திரியங்கள் ஐந்தின் ஸ்தானம்.)

காதிற்குள்ளே சுரோத்திரேந்திரியமும், கநசிகை நீங்கலாக சர்வாங்கத்திலும் துவக்கிந்திரியமும, கருவிழி நுனியிலே சட்சு விந்திரியமும், நாக்கின் நுனி இரண்டு விறற்கடையில் சிங்குவை இந்திரியதும், மூக்கு நுனியில் ஆக்கிராண விந்திரியமும் இருக்கின்றன.

(வாயுக்கள் ஐந்தின் ஸ்தானங்கள்.)

சர்வாங்கத்திலும் வியானவாயுவும், இருதயமுதல் நாசிபரியந்தம் பிராணவாயுவும், குதத்தில் அபான வாயுவும், நாபிஸ்தானத்தில் சமானவாயுவும், கண்டத்தில் உதானவாயுவும் இருக்கின்றன.

(கர்மேந்திரியங்கள் ஐந்தின் ஸ்தானங்கள்.)

வாயில் வாக்கிந்திரியமும், கையில் பாணி இந்திரியமும், காலில் பாதவிந்திரியமும். குதத்தில் பாயுரு

விந்திரியமும், குய்யத்தில் உபஸ்தவிந்திரியமும் இருக்கின்றன.

இந்த வாசஸ்தானமாகிய தூலசரீரதத்துவம் ௬-ம் அதில் வசிப்பவைகளாகிய சூக்ஷ்ம சரீரதத்துவம் (உம்) ஆக தத்துவம் உ௬-ம் பஞ்ச பூதங்களின் காரியமானபடியால் காரிய சரீரமென்று சொல்லப்படும். மூலப்பிரகிருதியின் ரஜோகுண அம்சமாகிய அவித்தை காரண சரீரமென்று சொல்லப்படும். இப்படிச் சீவனுக்குத் தூலசூட்சும காரணமாகிய மூன்று சரீர உற்பத்தி சொல்லப்பட்டது.

இந்த காரண சரீரமாகிய அவித்தையிற் பிரதிபிம்பித்த சிதாபாசனாகிய ஜீவன் இந்தக் காரண சரீரத்தை நானென்றபிமானித்துச் சுழுத்தியவத்தையைப் பொருந்தி நிற்கும்போது பிராஞ்ஞனெனப்படுவன். சூட்சும சரீரமாகிய இருபது தத்துவங்களையும் நானென்றபிமானித்துச் சொப்பனவத்தையைப் பொருந்தி நின்றபோது தைஜசனெனப்படுவன். ஸ்தூல சரீரமாகிய ஆறு தத்துவங்களையும் நானென்றபிமானித்து சாக்கிராவத்தையைப் பொருந்திநிற்கும்போது விசுவனெனப்படுவன். இப்படி ஜீவனுக்கு மூன்றுசரீரங்களும் மூன்றவத்தைகளும் சொல்லப்பட்டன.

இந்தச் சீவனுடைய தூல சூக்ஷ்ம காரண சரீரங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே வியஷ்டியெனப்படும். எல்லாம் ஒன்ருய்க் கூடினது சமஷ்டியெனப்படும்.

இந்தச் சீவர்களுடைய காரண சரீரமாகிய அவித்தைகள் எல்லாம் சேர்ந்தது ஈசுவரனது காரணசரீரமாகிய சமஷ்டிமாயை யென்றும் அவ்வியாகிருதமென்றும் சொல்லப்படும். இதை நானென்றபிமானித்து சுழுத்தியவத்தையைப் பொருந்தி நிற்கின்ற ஈசுவரனுக்கு அந்தர்யாமி யென்றுபெயர். இந்த காரண சரீரத்திற்கும் சுழுத்தியவத்தைக்கும் அதிஷ்டான சைதன்யத்திற்கு உருத்திரனென்று பெயர்.

சூட்சும பூதங்களைந்தும் அவற்றிற்ருேன்றின சீவர்களது சூட்சும சரீர சமஷ்டியுங்கூடினது ஈசுவரனது சூட்சும சரீரமென்றும் இரணிய கர்ப்பமென்றுஞ் சொல்லப்படும். இதை நானென்றபிமானித்துச்சொப்பனவத்தையைப் பொருந்திநிற்கின்ற ஈசுவரனுக்குச் சூத்திராத்மா வென்றுபெயர். இந்த சூட்சும சரீரத்திற்கும் சொப்பனவத்தைக்கும் அதிஷ்டான சைதன்யத்திற்கு விஷ்ணுவென்று பெயர்.

தூலபூதங்களைந்தும் அதிற்றோன்றின சீவர்களது தூலசரீர சமஷ்டியுங் கூடினது ஈசுவர தூல சரீரமென்றும் விராட்டென்றும் சொல்லப்படும். இதை நானென்றபிமானித்து சாக்கிராவத்தையைப் பொருந்தியிருக்கின்ற ஈசுவரனுக்கு வைசுவானரனென்றுபெயர். இந்தத் தூல சரீரத்திற்கும் சாக்கிராவத்தைக்கும் அதிஷ்டான சைதன்யத்திற்குப் பிரம்மா வென்றுபெயர். இப்படி ஈசுவரனுக்கு மூன்று சரீரமும் மூன்றவத்தைகளும் சொல்லப்பட்டன.

மாயாப்பிரதிபிம்பராகிய ஈசுவரன் அவித்தியாப் பிரதிபிம்பராகிய ஜீவர்களுக்கு போகஸ்தானமாகிய ஸ்தூல சரீரத்தையும், போககாரணமாகிய சூக்ஷ்ம சரீரத்தையும் சிருஷ்டித்துக்கொடுத்தார். ஜீவர்கள் அவ்விரு சரீரத்தையும் பெற்று முற்கூறிய ஆவரண சக்தியின் மறைப்பால் ஸ்தூல சரீரதத்துவம் ௬௰-ம் அதில் குடிப்புகுந்த சூக்ஷ்ம சரீரதத்துவம் ௨௰-ம் காரண சரீரமாகிய அவித்தை ௧. அதில் பிரதிபிம்பித்த ஆபாசன் ௧. அதற்கதிஷ்டானமாகிய பிரஹ்ம

சைதன்னியம். ௧. ஆக இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒன்றாக (ஒரேவடிவமாக) நானென்றபிமானிப்பன். இந்த அபிமானத்தை அகங்காரக் கிரந்தியென்றும் சம்சார பந்தமென்றும் சொல்வர். சற்குரு கடாக்ஷத்தினாலே இந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவங்களுள் சத்ரூபமாகிய பிரஹ்மமே தானென்றும் அசத் ரூபமாகிய மற்ற இருபத்தெட்டு தத்துவங்களும் தானல்லவென்றும் தெரிகின்றதே முக்தி. இதுவரையில் தத்துவங்களின் தோற்றமும் நிலையும் சொல்லப்பட்டன.

## தத்துவங்களின் லய (ஒடுக்க) நிருபணம்.

பிரளயகாலத்தில் சகல ஜீவர்களிடத்திலுமிருக்கின்ற ஸ்தூலசரீரங்களனைத்தும் தமக்காதாரமான ஸ்தூலபூதங்களிலே மடிந்து பூதமாத்திரமாக வொடுங்கும் இந்த ஸ்தூல பூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரையான தமோகுணபூதங்களாக மிஞ்சும். அப்பொழுது கேவலம் இரணியகர்ப்பாவஸ்தையென்று சொல்லப்படும். சூக்ஷ்மசரீர தத்துவங்கள்

இருபதுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடைய சத்துவ குணமும் ரஜோகுணமுமாக வொடுங்கும். அஃதெங்ஙனமெனின்:—

சகல பிராணிகளிடத்திலு மிருக்கின்ற அகங்காரமும் ஆக்கிராணமும் உதானனும் உபஸ்தமும் பிருதிவியிலொடுங்கும்.

சித்தமும் சிங்ஙுவையும் சமானனும் பாயுருவும் அப்புவிலொடுங்கும்.

புத்தியும், சக்ஷுவும், அபானனும் பாதமும் அக்கினியிலொடுங்கும்.

மனதும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவிலொடுங்கும்.

உள்ளமும், ஸ்ரோத்திரமும் வியானனும், வாக்கும் ஆகாசத்திலொடுங்கும். அப்பொழுது பழயபடியே முக்குணமுடைய சூக்ஷ்ம பூதங்களாம். இந்தச் சூக்ஷ்ம பூதங்களுள், பிருதிவி அப்புவிற் கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற் சுவறியொடுங்கும் அக்கினியும் விளக்குப்போல வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாசத்தி லோய்ந்தொடுங்கும்.

ஆகாசமும் விக்ஷேபசக்தியி லொடுங்கும். ஆவரண சக்தியும் விக்ஷேப சக்தியும் மூலப்பிரகிருதியின் தமோகுணமாத்திரமாய் ஆலமரம் ஆலவித்திலொடுங்கினாற்போல இன்னமொரு சிருஷ்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அந்த மாயையும் அவித்தையும் அதிருட்பமான மூலப்பிரகிருதி யென்று சொல்லப்படும். விந்து தத்துவத்திலொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்ற பெயர் போய்ப்பழுதையாகக் கண்டாற்போலத் தனக்கதிஷ்டானமான பிரஹ்மசைதன்னியமாத்திரமாகவொடுங்கும்.

## அநாதிபதார்த்த நிருபணம்.

எப்படி சுத்தப்பிரஹ்மம் அநாதியோ, அப்படியே * மாயையும் அநாதியாம். மாயை அநாதியான படியால் அதற்குப் பிரஹ்மத்தோடுள்ள † சம்பந்தமும் அநாதியாம். சம்பந்தம் அநாதியானபடியால் சம்பந்தியாகிய மாயையில் பிரதிபிம்பரான ஜீவேஸ்

* மாயை = மூலப்பிரகிருதி † சம்பந்தம் = கற்பித சம்

வரர்களும் அநாதியாம். இவ்வைந்தும் அநாதியான படியால் இவைகளுக்குள்ள ‡ பேதமும் அநாதியாம். இப்படி ஆறு வஸ்துக்களும் அநாதி என்று வேதங் கூறுகின்றது. இவற்றுள் பிரஹ்மம் § அநாதி அநந்தமும், மற்றவை || அநாதி சாந்தமுமாம்.

---

பந்தம் ‡ பேதம் = வேற்றுமை. § அநாதி அநந்தம் = உற்பத்தி நாசம் அற்றது. || அநாதி சாந்தம் = உற்பத்தியின்றி நாசமுடையது. பிரஹமம் உற்பத்தி நாசமின்றி எப்போது மிருத்தலால் சத்திய அநாதியெனப்படும். மாயை முதலியவை அஞ்ஞான காலத்தில் விளங்கி ஞானகாலத்தில் பாதிக்கப்படுதலால் கற்பித அநாதியெனப்படும். எப்படியெனின் கானற்சலம் எப்படி மூடமதியுள்ள மான்களுக்குச் சத்தியமாகத்தோன்றி விவேகமதியுள்ள மனிதர்களுக்குப் பொய்யாகத் தோற்றுகிறதோ, அப்படியே இம்மாயை முதலியவைகளும் மூடர்களுக்குச் சத்தியமாயும், முமூட்சுக்களுக்கு அநிர்வசநீயமாயும், விவேகிகளுக்கு (ஞானிகளுக்கு)ப் பொய்யாகவும் தோற்றுகிறது. அவ்வகையே வேதமும் மூடர்களைக்குறித்து மாயையை சத்தியை யென்றும், முமூட்சுக்களைக் குறித்து அநிர்வசநீயை யென்றும், ஞானிகளைக்குறித்து துச்சை (பொய்) யென்றும் கூறுகின்றது.

மாயாப்பிரதிபிம்பரான ஈசுவரன் அவித்தியாப் பிரதிபிம்பராகிய ஜீவர்களுக்கு மாயையினின்றும் * தனு, கரண, புவன, போகங்களைச் சிருஷ்டித்துக் கொடுத்தார். அவர்கள் தனு, கரணங்களைப்பெற்று அவற்றோடு அபேதமாய்க் கலந்து அவைகளுக்கு வேறாகத் தன்னை அறியாமல் † இரும்பில் பிரவேசித்த அக்கினி இரும்பாய் விளங்குவதுபோல தனுகரணங்களையே தானென்ன மயங்கினர்.

---

* தனு, கரண, புவன, போகங்கள் :— தனு = ஆறுதத்துவங்களாகிய ஸ்தூலதேகம். கரண = இருபது தத்துவங்களாகிய சூக்ஷ்மதேகம். புவனம் = பதினான்கு புவனங்கள் போகங்கள் = அனுபவிக்கப்படு பொருள்கள்.

† இரும்பில் பிரவேசித்த அக்கினி = பழுக்கக்காய்ச்சிய இரும்பானது அக்கினியினுடையபிரகாசத்தையும் உஷ்ணத்தையும் கிரகித்துக்கொண்டு இரும்பு சுடுகிறது, இரும்பு பிரகாசிக்கிறது என்று உலகினரால் வழங்கப்படுவதுபோல ஸ்தூல சூக்ஷ்ம காரணமாகிய மூன்று தேகங்களும் பிரஹ்மத்தினுடைய சத்துத்தன்மை, சித்துத் தன்மைகளைப்பெற்று நான் இருக்கின்றேன் அறிகின்றேன் என்று வழங்கப்படுகிறது.

அஃதெப்படி என்றால் சிலர் தாங்கள் பெற்ற ஸ்தூலதேகத்தையே ஆத்மாவென்றும் சிலர் பிராணவாயுவே ஆத்மாவென்றும், சிலர் மனதே ஆத்மாவென்றும், சிலர் புத்தியே ஆத்மாவென்றும், சிலர் அவித்தையாகிய அஞ்ஞானமே ஆத்மாவென்றும் ஒப்பி புண்ணிய பாப கர்மங்களின் வசத்தால் சுவர்க நரகங்களை அடைந்து யாதாமோர் புண்ணிய கர்மத்தின் பிரபாவத்தால் மனித சரீரத்தை அடைந்து இந்த சம்சாரத்தில் நாநாவிதமான தோஷங்களைக் கண்ணுற்று, சம்சாரத்தினின்று வைராக்கியத்தை அடைந்து மோக்ஷத்தை அடையவேண்டுமென்னும் இச்சையால் ‡ நிஷ்காம கர்மோபாசனைகளைச்செய்து அந்தக்கரணத்திலுள்ள § மல

---

‡ நிஷ்காம கர்மோபாசனை = பலாபேக்ஷயின்றி ஈசுவரார்ப்பண புத்தியாக செய்யப்படும் சுபகர்மங்களும் ஈசுவர மூர்த்தி தியானமும்.

§ மலம் = மலமென்பது பாபத்திற்காம் அந்தப்பாபம் ஜன்மாந்தரங்களிற் செய்யப்பட்ட அசுபகர்மத்தி (தீவினையி) னாலுண்டாகிய அதர்மம் அபூர்வம் அதிருஷ்டமென்று பெயர்களோடுகூடிய சம்ஸ்கார (வாசனை) வடிவமாயிருத்தலால் அதிசய (மிகச்) சூக்ஷ்மமாயிருக்கின்றது.

ஆதலால் பிரத்தியக்ஷமாகப் பார்க்கவருகிறதில்லை, என்று
லும் அசுபவாசனையின் வாயிலாக அதன் அநுமான முண்
டாகிறது.

எந்தப் புருஷனுக்கு நிஷித்த கர்மங்களிலாவது விஷ
யங்களிலாவது இச்சையுண்டாகின்றதோ, அவனுடைய
சித்தத்தில் அசுபவாசனை யிருக்கின்றது. இதனாலேயே
அவன் மலதோஷத்தோடு கூடியவனென அறியப்படு
கின்றான், ஆகையால் அவன் நிஷ்காம கர்மத்தையாவது
சர்வ ஜீவர்களிடத்தும் இரக்கத்தையாவது அல்லது ஈசு
வரநாம உச்சாரண முதலியவற்றையாவது செய்யவேண்
டும். ஏனெனின், நிஷ்காம கர்மத்தினாலாவது சர்வ பூதங்
களிடத்தும் வைக்கு மிரக்கத்தினாலாவது ஈசுவரநாம
உச்சாரணத்தினாலாவது மலதோஷம் நிவிருத்தியாகின்
றது. அவற்றுள் ஈசுவர நாமத்தைக் கிரமப்படி உச்சரித்
தல் எதுவோ அது பாபம், விக்ஷேபம் (சஞ்சலத்தன்மை)
என்னும் இருவகை மலத்தையும் நாசஞ் செய்வதாய் யிரு
க்கின்றது. மற்றகர்ம முதலியன பாபவடிவமான மலத்
தை மாத்திரம் நாசஞ் செய்வனவா யிருக்கின்றன.

|| விக்ஷேபம் = சித்தத்தின் சஞ்சலத் தன்மைக்கு
விக்ஷேபமென்று பெயர். எவனுடைய சித்தம் வேதாந்த
சிரவண முதலியவற்றிலாவது அல்லது மகாவாக்கியத்

தின் அர்த்தமாகிய சுவசொரூபத்திலாவது ஸ்திரமாகாமல் அந்நிய விஷயங்களில் சுழன்றுகொண் டிருக்கிறதோ அவனுடைய சித்தம் சஞ்சலமாம். இதனாலேயே அந்தப்புருஷன் விக்ஷேப தோஷத்தோடுகூடியவ னென்றறியப் படுகின்றான்,

ஆகையால் அவன் ஈசுவரநாம உச்சாரணம் அல்லது அஜபா மந்திரோச்சாரணம் ஈசுவர மூர்த்தித்தியானம் அல்லது நிர்க்குணப் பிரஹ்மத்தைச் சிந்தித்த லென்னும் இவைமுதலிய உபாசனைகளைச் செய்யவேண்டும். ஏனெனில் உபாசனையினால் சித்தத்தின் ஏகாக்கிரத்தன்மையுண்டாய் விக்ஷேபதோஷத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது.

¶நான்கு சாதனங்களாவன:— 1 நித்தியா நித்தியவஸ்து விவேகம் (நித்திய அநித்தியப் பொருள்களைப் பகுத்தறிதல்2. இகா முத்திரார்த்த பலபோகவிராகம் (இம்மை மறுமைப்பயன்களாகிய போகங்களில் இச்சையின்மை) 3 சமாதிசட்சம்பத்தி (சமமுதலிய ஆறனடைவு) 4 முமுக்ஷுத்துவம் (மோக்ஷத்தை விரும்புதல்) என்பனவாம்.

1. நித்தியா நித்திய வஸ்து விவேகம்=ஒன்றாகிய பிரஹ்மம் நித்தியப்பொருள்; அதற்கு அந்நியமான (வேறான) யாவும் அநித்தியப் பொருளாமென்னும் இதுவே நித்தியா நித்திய வஸ்து விவேகம். 2 இகா முத்திரார்த்த பல போக விராகம் = இகலோக பரலோக போகங்களில்

பன்னர்களாய் $ தாபத்திரயாக்கினியால் தகிக்கப் பட்டுத் தலையில் நெருப்புப் பற்றியவன் ஜலத்தைத்

---

இச்சையில்லாமையாம். 3 சமாதிசட்சம்பத்தி=(1)* சமம் (2) தமம், (3) உபரதி; (4) திதிக்ஷை, (5) சிரத்தை, (6) சமாதானம் என்பனவாம். 4. முமுக்ஷுத்துவம் = மோக்ஷம் எனக்கு உண்டாகவேண்டும் என்னும் இச்சை.

(1)* சமம் = மனதை யடக்குதல் (2) தமம் = கண் முதலிய புறவிந்திரியங்களை யடக்குதல் (3) உபரதி = சுவதர்மாநுஷ்டானமே அதாவது பாகிய தர்மங்களினின் றும் நிவர்த்தியாதலே (4) திதிக்ஷை= சீதம் (குளிர்ச்சி) உஷ்ணம், சுகம், துக்கம் முதலியவற்றைச் சகித்தல் (5) சிரத்தை = குருவாக்கியம் வேதாந்தவாக்கிய முதலிய வற்றில் உண்டாகும் விசுவாசம் (6) சமாதானம் = சித்த ஏகாக்கிரத்தன்மை(மனவொருமை).

$ தாபத்திரயம் — (1) அத்தியாத்ம துக்கம் (2) அதி பூத துக்கம் (3) அதிதைவ துக்கம்.

(1) ஆத்மாவை யாசிரயித்திருக்கும் ஸ்தூல சூக்ஷ்ம சரீரம் அத்யாத்மம்-அதாவது ரோகம், தாகம், பசி முதலி யவற்றாலுண்டாகும் துக்கம் அத்தியாத்ம துக்கம்.

தேடுவதுபோல * சுரோத்திரியரும் ‡ பிரஹ்ம நிஷ்டருமாகிய குருவைத்தேடி § விதிப்படி சரண மடைந்து பக்தியுடன் பலவித சேவை செய்திருந் தனர்.

---

(2) தனது சரீராதி சங்காதங்களுக்கு வேருய சக்ஷு இந்திரியத்திற்கு விஷயமாவது யாதோ அது அதிபூதம். அதாவது திருடர், புலி, சர்ப்பமுதலியவற்ற லுண்டாகும் துக்கம் அதிபூத துக்கம்.

(3) சரீராதி தனது சங்காதத்திற்கு வேருய் சக்ஷு இந்திரியத்திற்கு விஷயமாகாதிருப்பது அதிதைவம். அதாவது யக்ஷ ராக்ஷஸப் பிரேதக் கிரகாதிகளாலும் சீதவாத ஆதபங் (குளிர் காற்று வெயில்) களாலும் உண்டாகும் துக்கம் அதிதைவ துக்கம்.

* சுரோத்திரியர் = சுருதியின் அர்த்தத்தை செவ்வை யாக உணர்ந்தவர்.

‡ பிரஹ்மநிஷ்டர் = தனது ஆத்மாவாகிய பிரஹ்மத் தில் அபரோக்ஷ நிஷ்டை யுடையவர்.

§ விதிப்படி = பூஜாத்திரவியங்களை கையிற்கொண்டு குருவினிடம் சென்று மும்முறை வலம்வந்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம்செய்து ஸ்தோத்திரித்து இவரே எனது புகலிட மென்றும் நம்பிக்கையுடன் அவரிடம் குரு பாவம் செய்யவேண்டும்.

## சீடனுடைய விண்ணப்பம்.

இவ்விதமாக நாநாவித பணிவிடைகளால் மனமகிழ்ந்து பிரசன்னராய் கிருபாதிருஷ்டியை பாலித்த குருவைநோக்கிப் பணிந்து விண்ணப்பஞ் செய்கின்ருன். கிருபாநிதியாகிய குருவே நான் தாரபுத்திர தனுதிகளாகிய அக்கினியினுல் தகிக்கப்பட்டு அதற்கு ஆற்ருதவனுய் தங்களைச் சரணடைந்தேன். தாங்கள் என்னை இச்சம்சாரசாகரத்தினின்றும் கரையேற்ற வேண்டுமென்று துதித்துநின்றனன்.

குரு :— ஹே குழந்தாய்! ஆத்மாவை அறிந்தவன் சோகத்தைக் கடக்கின்ருன் என்ற சுருதிப்படி நீ உன்னை அறியாதவனுயிருக்கின்ருய். ஆகையால் சம்சாரமாகிய அநான்ம பந்தம் உன்னை வருத்துகின்றது. உன்னை நீ அறிவாயாகில் இந்த பந்தம் நீங்கிவிடும்.

சிடன் :— சுவாமி நான் என்னும் * சொல்லிற்கும் நான் என்னும் † ஞானத்திற்கும் எது விஷய

* சொல்லிற்கு விஷயம் = சொல்லப்படு பொருள்.

† ஞானத்திற்கு விஷயம் = அறியப்படு பொருள்.

மாகின்றதோ அது ஆத்மாவாம் என நான் அறிந்திருக்கின்றேன். அப்படியே நான் என்னும் சொல்லிற்கும் நான் என்னும் ஞானத்திற்கும் இந்த பிரத்தியக்ஷமாகிய சரீரமே விஷயமாகின்றது. ஆனபடியால் இந்த சரீரத்தையே நான் என்று அறிந்திருக்கின்றேன், அப்படி அறிந்திருந்தும் ஏன் இந்த சம்சாரம் என்னை விட்டு நீங்கவில்லை.

குரு:—இவ்வாறு தேகத்தையே தானென்று கூறிய சீடனுக்கு ஆத்மாநாத்ம விவேகத்தைக் காட்டவேண்டி முற்கூறிய வண்ணம் பிரஹ்மசொரூபத்தில் கற்பனையாகத் தோன்றிய ஜீவேசுவர ஜகத் என்னும் இம் மூன்றின் உத்பத்தி லயங்களைக்காட்டி பின்னர் சீடனது ஆத்ம சொரூபத்தை பஞ்ச ‡ கோசங்களுக்கு வேறாக யுணர்த்தவேண்டி அவற்றின் சொரூபத்தைக் கூறுகின்றார்.

---

‡ கோசமென்பது கத்தியை மறைக்கும் உறைக்கும், திரவியத்தை மறைக்கும் பெட்டிக்கும், புளியம் பழத்தை மறைக்கும் ஓட்டிற்கும் பெயராம். கோசமெனினும் உறையெனினும் மூடியெனினு மொக்கும். உறை முதலானவை கத்தி முதலானவைகளை மறைத்திருத்தல்

## பஞ்சகோச நிரூபணம்.

1 அந்நமயம் 2 பிராணமயம் 3 மனோமயம் 4 விஞ்ஞானமயம 5 ஆநந்தமயம். இப்பஞ்ச கோசங்களுள் அந்நமயம் ஸ்தூல தேகத்திலடங்கும். பிராணமயம் மனோமயம், விஞ்ஞானமயம், சூக்ஷ்ம தேகத்திலடங்கும். ஆநந்தமயம் காரணதேகத்திலடங்கும்.

---

போன்று அன்னமயாதிகளும் ஆத்மாவை மறைத்திருத்தலினாலே அவைகளும் கோசம் என்று சொல்லப்படுகின்றன. மறைத்தல் இருவகையாம்: ஒன்று யதார்த்தமாய் மறைத்தல், மற்றொன்று கற்பிதமாய் மறைத்தல். புளியம்பழத்தை யதனது ஓடு மறைத்தல் யதார்த்தமாய் மறைத்தல். கயிற்றிற்றோன்றிய பாம்பு கயிற்றை மறைத்தல் கற்பிதமறைப்பு. கயிற்றில் அத்தியாசமாகத் தோற்றிய பாம்பு அக்கயிற்றையே மறைத்தல் போன்று ஆத்மாவிற்றோன்றிய அந்நமயாதி கோசங்கள் அவ்வாத்மாவையே மறைத்தல் கற்பிதமறைப்பு. இஃது ஞானத்தால் நீங்கும். யதார்த்த மறைப்பு கர்மத்தால் நீங்கும். கர்மத்தால் நீங்கிய மறைப்பு வேறுபட்டு விளங்கும். ஞானத்தால் நீங்கிய மறைப்பு அபாவவடிவமாய் அதிஷ்டானவடிவமே யாம்

## 1. அந்நமய கோசம்.

அந்நரசத்தினுலே யுண்டாய் அந்நரசத்தினுலே விருத்தியடைந்து அந்நரூபப் பிருதிவியில் எது ஒடுங்குகின்றதோ அத்தன்மையா ஆறு தத்துவமாகிய ஸ்தூல சரீரமே அந்நமயகோசமாம்.

## 2. பிராணமய கோசம்.

பிராணாதி ஐந்து வாயுக்களோடுகூடிய வாக்காதி ஐந்து கர்மேந்திரியங்களும் பிராணமய கோசமாம்.

## 3. மனோமய கோசம்.

சங்கற்ப விகற்பவடிவ அந்தக்கரண விருத்தியாகிய மனதோடுகூடிய ஞானேந்திரியமைந்தும் மனோமய கோசமாம்.

## 4. விஞ்ஞானமய கோசம்

நிச்சய ரூப அந்தக்கரணத்தின் விருத்தியான புத்தியோடுகூடிய ஞானேந்திரிய மைந்தும் விஞ்ஞானமயகோசமாம்.

## 5. ஆநந்தமய கோசம்.

புண்ணிய கருமத்தின் சுகவடிவ பலத்தை அநு யவிக்குங் காலத்து ஒருகால் புத்திவிருத்தி அந்தர் முகமாய் ஆத்ம சொரூபமாகிய ஆநந்தத்தின் பிரதி பிம்பத்தை அடைகின்றது. அதே விருத்தி புண் ணிய கருமபல அநுபவம் நீங்கியகாலத்து நித்திரை வடிவமாக காரணதேகத்தில் (அவித்தையில்) ஒடுங்கு கின்றது. அவ்விருத்தியோடு கூடிய காரணதேகமே ஆநந்தமயகோசமாம்.

அந்நமய கோசமாகிய குகைக்குள் பிராணமய கோசமிருக்கின்றது. பிராணமயகோசமாகிய குகைக் குள் மனோமயகோசமிருக்கின்றது. மனோமயகோச மாகிய குகைக்குள் விஞ்ஞானமயகோசமிருக்கின் றது. விஞ்ஞானமயகோசமாகிய குகைக்குள் ஆநந்த மயகோசமிருக்கின்றது. அத்தன்மைய இப்பரம் பரை ஆத்மாவை மறைக்கும் குகையாம். இக்கோசங் கள் உன் நிஜ சொரூபத்தை ஒன்றன்பின் ஒன்ருக மறைக்கின்றன. அம்மறைப்பினைக் காட்டுவாம்.

## அந்நமயகோசத்தின் மறைப்பு.

நான் பிறந்தேன், நான் வளர்ந்தேன், நான் பருத்தேன், நான் இளைத்தேன் என்று பிறத்தல் தன்மை முதலியவற்றோடு கூடிய தூலசரீரம் நான் என்னும் சொல்லுக்கும் நான் என்னும் ஞானத்திற்கும் விஷயமாகி நான் என்னும் சொற்பொருளாகிய § சுயம் பிரகாச ஆத்மாவை மறைத்துத்தான் ஆத்மாவாக விளங்குகின்றது. நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன் என்று பிராமணத்தன்மை முதலியவற்றோடு கூடிய தூலசரீரம் சுயம்பிரகாச ஆத்மாவை மறைத்துத் தான் ஆத்மாவாக விளங்குகின்றது. நான் பிரம்மசாரி, நான் கிரகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி

---

§ சுயம்பிரகாசம் = தனது பிரகாசத்தில் வேறு பிரகாசத்தை அபேக்ஷியாதது சுயம்பிரகாசம். தனது பிரகாசத்தில் வேறு பிரகாசத்தை அபேக்ஷித்து நிற்பது பரப்பிரகாசம். அத்தன்மையது பஞ்சகோசங்களாம். அவைகள் ஆத்மாவின் பிரகாசத்தைப் பெற்றே தான் ஆத்மாவாக விளங்குகிறபடியால் அவைகள் பரப்பிரகாசங்களாம்.

என்று பிரம்மசரிய முதலிய தன்மையோடு கூடிய தூலசரீரம் சுயம்பிரகாச ஆத்மாவை மறைத்துத் தான் ஆத்மாவாக விளங்குகின்றது.

## பிராணமயகோசத்தின் மறைப்பு.

நான் இந்த பஞ்சத்திற்கு ஜீவித்திருந்தேன் நான் பசித்திருந்தேன், நான் தாகித்திருந்தேன் என்று ஜீவித்தல் தன்மை முதலியவற்றோடுகூடிய பிராண வாயு நானென்னும் சொல்லிற்கும் நானென்னும் ஞானத்திற்கும் விஷயமாகி நானென்னும் சொற் பொருளாகிய சுயம்பிரகாச ஆத்மாவை மறைத்துத் தான் ஆத்மாவாக விளங்குகின்றது. நான் வசனித் தேன், நான் கொடுத்தேன், நான் நடந்தேன், நான் விசர்ச்சித்தேன், நான் ஆநந்தித்தேன் என்று வச னித்தல் தன்மை முதலியவற்றோடு கூடிய கர்மேந் திரியம் நான் என்னும் சொற்பொருளாகிய சுயம்பிர காச ஆத்மாவை மறைத்துத்தான் ஆத்மாவாக விளங் குகிறது.

## மனோமயகோசத்தின் மறைப்பு

நான் ‖ சங்கற்பித்தேன், விகற்பித்தேன் என்று

‖ அந்தக்கரண விருத்தி ஞானேந்திரிய வாயிலாக

சங்கற்ப விகற்பத்தன்மையோடு கூடிய மனம் நான் என்னும் சொல்லிற்கும் நான் என்னும் ஞானத்திற்கும் விஷயமாகி நான் என்னும் சொற்பொருளாகிய சுயம்பிரகாச ஆத்மாவை மறைத்துத்தான் ஆத்மாவாக விளங்குகின்றது.

---

புறம்போந்து சத்தாதி விஷயங்களை பற்றுதல் (தொடுதல்) சங்கல்பம். தொட்டபொருளில் ஐயுருதல் விகற்பம். இது வாயுவின் அம்சமாகி சஞ்சல சுபாவமாயிருத்தலின் இதினால் நிச்சயமுண்டாகிறதில்லை. சுரோத்திரத்தின் வாயிலாய் புறம்போந்து நான் சத்தத்தை சங்கற்பித்தேன் விகற்பித்தேன் என்றும். துவக்கிந்திரிய வாயிலாக புறம்போந்து நான் இப்பரிசத்தை சங்கற்பித்தேன், விகற்பித்தேன் என்றும். சக்ஷுவிந்திரிய வாயிலாக புறம்போந்து நான் உருவத்தை சங்கற்பித்தேன் விகற்பித்தேன் என்றும். ஜிஹ்வேந்திரிய வாயிலாக புறம்போந்து நான் ரசத்தை சங்கற்பித்தேன் விகற்பித்தேன் என்றும், கிராணேந்திரிய வாயிலாக புறம்போந்து கந்தத்தை சங்கற்பித்தேன் விகற்பித்தேன் என்றும் உன்னில் இந்திரியங்களைவிட்டு நேரே சுக துக்கங்களை சங்கற்பித்தேன் விகற்பித்தேன் என்றும் ஆத்மாவை மறைத்து மனது ஆத்மாவாகவிளங்குகின்றது.,

## விஞ்ஞானமயகோசத்தின் மறைப்பு.

நான் ¶ நிச்சயித்தேன் என்று நிச்சயத்தன்மையோடு கூடிய புத்தி நான் என்னும் சொல்லிற்கும் நான் என்னும் ஞானத்திற்கும் விஷயமாகி நான் என்னும் சொற்பொருளாகிய சுயம்பிரகாச ஆத்மாவை மறைத்து தான் ஆத்மாவாக விளங்குகின்றது.

## ஆநந்தமயகோசத்தின் மறைப்பு.

நான் ஒன்றுமறியேன், சுகமாகத்தூங்கினேன் என்று அறியாமை வடிவ காரணதேகமும் அதன் பிரியாதி விருத்தியிலுள்ள பிரதிபிம்பாநந்தமும் நான் என்னும் சொல்லிற்கும் நான் என்னும் ஞானத்திற்கும் விஷயமாகி நான் என்னும் சொற்பொரு

---

¶ மனதைப் பின்பற்றி நின்றபுத்திவிருத்தி விளக்க வடிவ அக்கினியினம்சமானபடியால் மனதின் ஐயப்பாட்டை ஒளித்து அப்பொருளை இன்னதென்று நிச்சயிக்கின்றது. இந்நிச்சயத்தினை ஐந்துஇந்திரியங்களிலும் கூட்டிப் பார்க்க. உள்ளில் இந்திரியத்தை விட்டுநேரே சுகதுக்கத்தை புத்தி நிச்சயிக்கின்றது இப்புத்தியும் ஆத்மாவை மறைத்துதான் ஆத்மாவாக விளங்குகின்றது.

ளாகிய சுயம்பிரகாச ஆத்மாவை மறைத்து தான் ஆத்மாவாக விளங்குகின்றது.

இப்பஞ்சகோசாதீதமாயும் சுயம்பிரகாசமாயுமுள்ள ஆத்மா பஞ்சகோசங்களில் கலந்து பஞ்சகோசவடிவ பரப்பிரகாசமாக விளங்குதலே ஜீவத்துவம். இந்த ஜீவனே ஜீவசப்தத்தின் வாச்சியார்த்தமாவன். இப்படி வியஷ்டி ஜீவனது பஞ்சகோசங்களைக்கூறி சமஷ்டி ஈசுவரனது பஞ்சகோசங்களைக் கூறுகின்றார்.

## ஈசுவர பஞ்சகோச நிரூபணம்.

சகல ஜீவர்களது ஸ்தூல சரீரசமஷ்டியும் ஸ்தூல பஞ்ச பூதங்களும் சேர்ந்து ஈசுவரனது ஸ்தூலசரீரமென்றும் விராட்டென்றும் சொல்லப்படும். இதுவே ஈசுவரனது அந்நமய கோசமாம்.

சகல ஜீவர்களது சூக்ஷ்மதேக சமஷ்டியும் சூக்ஷ்ம பஞ்சபூதங்களும் சேர்ந்து ஈசுவரனது சூக்ஷ்மசரீரமென்றும் ஹிரண்ணிய கருப்பமென்றும் சொல்லப்படும். பிராணமயகோசம், மனோமயகோசம் விஞ்ஞானமயகோசம் இதிலடங்கும். சகல ஜீவர்களின்

சமஷ்டி பிராணமயகோசமே ஈசுவரனது பிராணமய கோசமாம். சகல ஜீவர்களின் சமஷ்டி மனோமய கோசமே ஈசுவரனது மனோமய கோசமாம். சகல ஜீவர்களின் விஞ்ஞானமய கோசமே ஈசுவரனது விஞ்ஞானமய கோசமாம். சகல ஜீவர்களது காரண சரீரமாகிய சமஷ்டி அவித்தையே ஈசுவரனது காரண சரீரமாகிய மாயையாம் இதுவே ஈசுவரனது ஆநந்தமய கோசமாம். இக்கோசங்கள் ஈசுவரனது நிஜ சொரூபமாகிய பிரஹ்மசொரூபத்தை மறைப்பன வாகா. என்றாலும் அஞ்ஞானி ஜீவர்களது திருஷ்டி யால் பிரஹம சொரூபத்தை மறைப்பனவாயிருக் கின்றன. ஆகையால் இக்கோசங்களை விவேகிக்க வேண்டியது ஜீவர்களது கர்த்தவ்வியமாம். ஈசுவரன் மறைப்பின்றியவனாகையால ஈசுவரனுக்கு கர்த்தவ் வியமின்று இச் சமஷ்டி பஞ்சகோசாதிதமாயும் சொப்பிரகாசமாயும் விளங்கும் பிரஹம சைதன்னி யம் ஜீவனது திருஷ்டியால்பஞ்ச கோசங்களில் கலந்து இப்பஞ்சகோச வடிவ ஈசுவரனாக விளங்கு தலே ஈச சப்தத்தின் வாச்சியார்த்தமாம் அதாவது ஈசுவரனும். இப்படி சமஷ்டி வியஷ்டி கோசங்களின்

சொரூபத்தையும் அவற்றின் மறைப்பையுங்காட்டி-விடனது சொரூபத்தை பஞ்சகோசங்களுக்கு வேறாக உணர்த்தவேண்டி பஞ்சகோசவிவேகத்தைக் கூறுகின்றார்.

## பஞ்சகோச விவேகம்.

### அந்நமயம்.

குரு:—ஹே குழந்தாய் நீ முன்னர் நானென்னும் சொல்லிற்கும் நானென்னும் ஞானத்திற்கும் விஷயமாகக்கூறிய அந்நமயக்கோசத்தை நீயே பின்னொரு சமயத்தில், என்னுடையமாடு என்னுடைய கன்று என்றாற்போல என்னுடைய சரீரம் பருத்தது, இளைத்தது என்று உன்னின் வேறாய்க் கூறுகிறாய். இது உண்மையாக உன் சொரூபமாகயிருக்குமானால் இது உன்னின் வேறாக விளங்கக்கூடாது. வேறாக விளங்குகின்றபடியால் இது உன் சொரூபமாகமாட்டாது. நீ இதை அறிபவனாயிருக்கிறபடியால்கடத்தை அறிபவன் கடத்திற்கு வேறாய் விளங்குவதுபோல நீ இதற்கு வேறாயிருக்கின்றாய் மேலும் இந்தச் சரீரம் பிறத்தற்கு முன்னும் மறித்த

தன் பின்னுமில்லை. ஆகையால் இது உற்பத்தி நாச முடையதாயிருத்தலின் இது கடத்தைப்போல காரியமாம். எதுகாரியவடிவமோ அது ஜடமும் அநித்தியமுமாம். நீ எப்போதுமிருப்பவனாய் (சத்தாய்) இதின் உற்பத்தி ஸ்திதி நாசங்களை அறிபவனாய் (சித்தாய்) இருக்கின்றாய். ஆகையால் நீ இதனின் வேறாயிருக்கின்றாய். ஆகையால் அந்நமயகோசம் நீ அன்று.

## பிராணமயம்.

நானென்னும் சொற்பொருளாய் விளங்கிய இந்த பிராணமயகோசமும் என்னுடைய பிராணன் ஓடுகின்றது என்னுடைய பிராணன்கிற்கின்றது என்று பிராணவாயுவும் என்னுடைய வாக்கு வசனிக்கின்றது என்னுடைய கை கொடுக்கின்றது என்னுடைய கால் நடக்கின்றது என்னுடைய பாயுருவிசர்ச்சிக்கின்றது என்னுடைய உபஸ்தம் ஆநந்திக்கின்றது என்று கர்மேந்திரியங்களும் முற்கூறியபடி உன்னின்வேறாக விளங்குகின்றது. இது உண்மை

யாக உன் சொரூபமாக இருக்குமாயின் இது உன்னின் வேருக விளங்கலாகாது. வேருக விளங்குகின்றபடியால் இது உன் சொரூபமாகமாட்டாது. நீ கடதிருஷ்டாவைப்போல இதனின் வேருயிருக்கின்ருய். மேலும் நீ தூங்குங்காலத்து இது விளித்திருந்தும் அப்போது உன்னைத்தேடி யாராவதொருவர் வருவாராயின் அவர்களுக்கு உபசாரஞ் செய்கிறதுமில்லை. திருடன் நகை வஸ்திரங்களை களைந்து போவானுயின் அவனைத்தடுக்கிறதுமில்லை. அதனுல் இந்த பிராணவாயுவு கடத்தைப்போல ஜடமாம். நீ சைதன்னிய (சித்து) ரூபமாய் இதனின் வேருயிருக்கின்ருய். மேலும் எருதானது தன் எஜமானனுல் கட்டுத்தரியில் கட்டப்பட்டும் அவிழ்க்கப்பட்டும் பாதந்திரமாயிருப்பதுபோல இப்பிராணவாயுவும் ஹடயோகிகளால் பூரகத்தால் இழுக்கப்பட்டும் கும்பகத்தால் கட்டுப்பட்டும் ரேசகத்தால் விடப்பட்டும் சுதந்திரமின்றி பாதந்திரமாயிருப்பதாலும் இது உன் வடிவமன்று. நீ இதனின் வேருய் இதை அறிபவனுயும் சுதந்திரனுயுமிருக்கின்ருய். ஆதலால் பிராணமய கோசம் நீ அன்று.

## மனோமய கோசம்.

நானென்னும் சொற்பொருளாய் விளங்கிய இந்த மனோமயகோசமும் என் மனது வேறிடத்திற்போயிருந்தது இப்போது வந்துவிட்டது என்று சொல்லுவதினால் முற்கூறியபடி உன்னின் வேறாக விளங்குகின்றது. இது உண்மையாக உன் சொரூபமாக இருக்குமாயின் இது உன்னின் வேறாக விளங்கலாகாது வேறாக விளங்குகின்றபடியால் இது உன் சொரூபமாகமாட்டாது. நீ கடதிருஷ்டாவைப் போல இதனின் வேறாயிருக்கின்றாய். மேலும் வாச்சி உளி முதலியவற்றைப்போல கரணமாயிருத்தலாலும் சுழுத்தி முதலியவற்றில் இல்லாமற்போகிறபடியினாலும் ஆத்மாவன்று. நீ இந்த மனமிருக்கும்பொழுது இதன் இருப்பையும் இது இல்லாத காலத்து இதன் இன்மையையும் அறிபவனாய் இதற்கு வேறாயிருக்கின்றாய் ஆகையால் மனோமயகோசம் நீ அன்று. இம் மனதோடுகூடிய ஞானேந்திரியங்களும் இவ்வாரே ஆத்மாவன்று.

## விஞ்ஞானமய கோசம்.

நானென்னும் சொற்பொருளாய் விளங்கிய இந்த விஞ்ஞானமயகோசமும் இதுவரையில் என் புத்தி

இதை நிச்சயிக்க ஆற்றலில்லாததாக இருந்தது. இப்பொழுதுதான் நிச்சயித்தது என்று சொல்லுவதினால் முற்கூறியபடி இது உன்னின் வேறாக விளங்குகின்றது. இது உண்மையாக உன்சொரூபமாக இருக்குமாயின் இது உன்னின் வேறாக விளங்கலாகாது. வேறாக விளங்குகின்றபடியால் இது உன் சொரூபமாகமாட்டாது. நீ கடதிருஷ்டாவைப் போல இதனின் வேறாயிருக்கின்றாய். மேலும் இந்த புத்தியும் சுழுத்தியில் சிதாபாசனுடன் லயத்தையடைகின்றது. இது ஜாக்கிரத்தில் விளங்குவதாயும் சுழுத்தியில் லயமுடையதாயு மிருக்கின்றது. ஆகலால் இது நாசமுடையதாம் நீயோ இதற்கு விலக்ஷணமாய் இதன் இருப்பு இன்மைகளை அறிபவனாய் அவிநாசியாயிருக்கின்றாய். ஆகையால் இது ஆத்மாவன்று. இப்புத்தியுடன்கூடிய ஞானேந்திரியங்களும் இவ்வாறே ஆத்மாவன்று.

## ஆநந்தமயகோசம்.

நானென்னும் சொற்பொருளாய் விளங்கிய இந்த ஆநந்தமயகோசமும் என்னுடைய அஞ்ஞானம்

என்னுடைய சுகம் என்று சொல்லுவதினால் முற்கூறியபடி இது உன்னின் வேறாகவிளங்குகின்றது. இது உண்மையாக உன்சொரூபமாக இருக்குமாயின் இது உன்னின் வேறாக விளங்கலாகாது. வேறாகவிளங்குகிறபடியால் இது உன் சொரூபமாகமாட்டாது. நீ கடதிருஷ்டாவைப்போல இதனின் வேறாயிருக்கின்றாய். மேலும் இது மேக முதலிய பதார்த்தங்களைப்போல * ஒவ்வொரு காலத்தில் இருப்பதாயிருத்தலால் க்ஷணிகமாம். நீ எப்போது மிருத்தலால் நித்தியன் ஆகையால் இந்த ஆநந்தமயகோசம் ஆத்மாவன்று.

சீடன் :—சுவாமி, பஞ்ச கோசங்கள்தான் அநுபவத்தில் வருகின்றன, இவற்றிற்கு வேறாக ஓர் ஆத்மா அநுபவத்தில் வாராமையால் ஆத்மா பஞ்ச கோசங்களுக்கு வேறாக இருக்கிறதென்னும் நிச்சயம் எப்படி உண்டாம்.

---

* ஒவ்வொருகாலத்தில் இருப்பதாய் = நித்திரை காலத்தில் அஞ்ஞானமும் புண்ணியபலபோகம் புசிக்குங்காலத்து ஆநந்தமும் இருந்துமற்றகாலத்து நீங்கிவிடுகின்றது.

குரு:—பஞ்சகோசங்கள்தான் அநுபவத்தில் வருகின்றன. இவற்றிற்கு வேருய் ஓர் ஆத்மா அநுபவத்தில் வரவில்லை என்னும் வார்த்தை சத்தியம். ஆயினும் எந்த அநுபவத்தால் இந்தப் பஞ்சகோசங்களும் அறியப்படுகின்றனவோ அவற்றை அறிபவனும் அவற்ருல் அறியப்படாதவனுமாகிய அந்த அநுபவ வடிவத்தைநிவர்த்திக்கக்கூடியவன் யாவன் ஒருவனுமில்லை. ஆகையால் பஞ்சகோசங்களின் அநுபவ ரூபமாகிய சைதன்னியம் யாதோ அது பஞ்சகோசங்களுக்கு வேருய் உனது நிஜ ரூபமாகிய கூடஸ்தனுகிய (சாக்ஷியாகிய) ஆத்மாவாம். அது சச்சிதாநந்த ரூபமாய் விளங்குகின்றது. இது ஜீவபதத்தின் லக்ஷியார்த்தமாம். இவ்வாறே சமட்டி பஞ்சகோசங்களுக்கு வேருய் அவற்றின் அதிஷ்டான வடிவமாய் விளங்கும் சைதன்னியம்யாதோ அது சச்சிதாநந்த சுத்தப் பிரஹ்மமாம். இதுவே ஈசபதத்தின் லக்ஷியார்த்தமாம்.

சிஷ்யன் கூறுகின்ருன்:—சுவாமி ஜீவ ஈச பதங்களின் வாச்சியார்த்த லக்ஷியார்த்தங்களைக் கூறினீர்

கள் அப்பதவாக்கியங்களின் சொரூபமும் அவைகள் அர்த்தத்தை யுணர்த்தும் கிரமமும் என் புத்தியில் புலப்படவில்லை. ஆகையால் அது என் புத்தியில் பொருந்தும்படி உபதேசித்தருளல் வேண்டும்.

## மஹாவாக்கிய நிருபணம்.

குரு :— ஹே குழந்தாய், பதவாக்கியங்களின் சொரூபத்தைக் கூறுகின்றேன். அர்த்த வாசகம் பதமெனப்படும். பதசமூகம் வாக்கியமெனப்படும்.

எழுத்தேதனித்தாவது தொடர்ந்தாவது பொருள் தரின் (பொருளை யுணர்த்துமாயின்) பதமாம். அது முக்கியம், கௌணம் என்னும் வேறுபாட்டால் இருவகைத்து. எது சக்தி விருத்தியால் எந்தப் பொருளை அறிவிக்கின்றதோ அது அப்பொருளில் முக்கியமாம். அது கடம், படம், முதலிய பொருள்களை அறிவிப்பது கடம், படம், முதலிய பதமாதல் போலவாம். எது இலக்கணை விருத்தியான் எப்பொருளை அறிவிக்கின்றதோ அது அப்பொருளின் கௌணமாகிய இலாக்ஷணிய மெனப்படுகின்றது.

அது கங்கையில் இடைச்சேரி என்புளிக் கங்கை என்னும் சொல்கரையை அறிவிப்பதாதல் போலவாம்.

சப்தத்திற்கு அர்த்தத்தோடுள்ள சம்பந்தம் சப்தத்தின் விருத்தி யெனப்படுகின்றது. அந்த விருத்தி சக்தி, லக்ஷணை, என்னும் பேதத்தால் இருவகைத்தாம். சப்தத்திற்கு அர்த்தத்தோடுள்ள சாக்ஷாத் (நேர்) சம்பந்தம் (பிரவிருத்தி) எதுவோ அது சப்தத்தின் சக்தி விருத்தியாம். அந்த சக்தி விருத்தியினால் எந்த அர்த்தம் அறியப்படுகின்றதோ அது வாச்சியார்த்தமெனப்படுகின்றது. இதனையே சக்கியார்த்தம், போத்தியார்த்தம், விதேயார்த்தம், முக்கியார்த்தம் என்று கூறுவர். அவை முற்கூறிய கடம், படம், முதலிய பொருள்கள் போலவாம். சக்கிய சம்பந்தம் (பரம் பரா சம்பந்தம்) லக்ஷணை எனப்படும், அந்த லக்ஷணை விருத்தியினால் எந்த அர்த்தம் அறியப்படுகின்றதோ அது லக்ஷியார்த்தமெனப்படும். அது முற்கூறியபடி கங்காபதம் கரையை அறிவிப்பதாதல்போலவாம். அந்தலக்ஷணை

விட்ட லக்ஷணை, விடாத லக்ஷணை, விட்டுவிடாத லக்ஷணை என்னும் பேதத்தால் மூன்று வகையாம். அவற்றுள் விட்டலக்கணை என்பது யாண்டு வாச்சியார்த்த முழுவதையும் விட்டு அதன் சம்பந்தியாகிய வேறு அர்த்தம் கொள்ளப்படுகின்றதோ ஆண்டு விட்டலக்ஷணையுண்டு எங்ஙனம் "கங்கையில் இடைச்சேரி" என்னும் வாக்கியத்தில் கங்கையென்னும் பதத்தின் வாச்சியார்த்தமாகிய தேவநதியின் பிரவாகத்தில் இடைச்சேரி சம்பவியாமையால் ஈண்டு கங்கையென்னும் பதத்தின் வாச்சியார்த்தம் முழுவதையும் (தேவநதியின் பிரவாகத்தை) விட்டு அதன் (கங்கையின்) சம்பந்தியாகிய கரைவடிவ வேறு (லக்ஷிய) அர்த்தம் கொள்ளப்படுகின்றது. ஆதலால் இது விட்ட லக்ஷணையாம் யாண்டு வாச்சியார்த்தத்தை விடாமல் அதன்சம்பந்தியாகிய அந்நிய (அதிக) அர்த்தம் கொள்ளப்படுகின்றதோ, ஆண்டு விடாத லக்ஷணையுண்டு. எங்ஙனம் "சிவப்பு ஓடுகின்றது. என்னும் வாக்கியத்தில் 'சிவப்பு' என்னும் பதத்தில் வாச்சியார்த்தமாகிய சிவப்பு நிறத்தில் ஓடுதல் சம்பவியாமையின் அதன் சம்பந்தியாகிய (ஆசிரயமான)

குதிரைவடிவ அங்கிய அர்த்தம் கொள்ளப்படுகின்றது. ஆதலால் இது விடாத லக்ஷணையாம்.

யாண்டு வாச்சியார்த்தத்தினின்றே விரோதிபாகத்தைவிட்டு அவிரோதிபாகம் கொள்ளப்படுகின்றதோ, ஆண்டு விட்டுவிடாத லக்ஷணையுண்டு. எங்ஙனம் "அவனே இத்தேவதத்தன்" என்னும் வாக்கியந்தில் பூதகாலமும் தூரதேசத்துள்ள தேவதத்தனது சரீரமும் அவன் என்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமாம். வர்த்தமான காலமும் சமீப தேசத்துள்ள தேவதத்தனதுசரீரமும் 'இந்த' என்னும்பதத்திற்கு வாச்சியார்த்தமாம். சமான (ஒரே) முதல் வேற்றுமையின் பலத்தால் அவ்விரண்டு வாச்சியார்த்தங்களின் ஒருமை அறிவிக்கப்படுகின்றது. அவ்வொருமை ஒன்றற்கொன்று விரோதியான இரண்டு பதார்த்தங்களுக்குச் சம்பவியாது. ஆதலால் தேசகாலவடிவவிரோதிபாகங்களைவிட்டு அவிரோதியான தேவதத்தனது சரீரத்தின் ஏகத்துவம் நிச்சயிக்கப்படுகின்றது. ஆதலால் இது விட்டுவிடாத லக்ஷணையாம். இம் மூன்று லக்ஷணையில் மஹாவாக்கியத்தில் விட்டுவிடாத லக்ஷணையே உபயோகமாம்.

## மஹாவாக்கியம்.

முற்கூறியபடி ஈசுவரனது சொரூபத்தையும் ஜீவனது சொரூபத்தையும் காட்டி அவ்விருவர்களது ஏகத்துவத்தை (ஐக்கியத்தை) உணர்த்தவேண்டி மஹாவாக்கியத்தைக் கூறுகின்றார்.

ஹே குழந்தாய்! உனக்கு சர்வ துக்க நிவர்த்தியும் பரமானந்தப் பிராப்தியுமாகிய மோக்ஷசித்தியின் பொருட்டு, சாமவேதத்தினது சாந்தோக்கிய உபநிடதத்திற் கூறிய மஹா வாக்கியத்தைக் கூறுகின்றேன். ஏகாக்கிர மனதுடையவனாய்க் கேட்பாயாக.

" தத்துவமசி "

தத் = அது (சுத்தப்பிரஹ்மம்), துவம் = நீயாய் (கூடஸ்தனாய்) அசி = இருக்கின்றாய், என்பது பொருள்.

இம் மஹாவாக்கியத்தில் முதற்பதம் 'தத்' என்னும் ஈசுவரவாசக பதமாம். சமஷ்டி பஞ்சகோசங்களோடு கூடிய ஈசுவரன் இதன் வாச்சியார்த்தமாம். அதாவது விராட்டாகிய ஸ்தூலசரீரம் ஹிரண்ணிய

கருப்பமாகிய சூக்ஷ்மசரீரம் அவ்வியாகிருதமாகிய காரண சரீரம் அதாவது மாயை இதிற் பிரதிபிம்ப சைதன்னியம், இதற்கதிஷ்டானமாகிய பிரஹ்ம சைதன்னியம் என்பவைகளாம். இவற்றுள் விரோதிபாகங்களாகிய சமஷ்டி பஞ்ச கோசங்களையும், ஆபாசனையும்விட்டு அதிஷ்டானமாகிய சுத்தபிரஹ்மம் மாத்திரம் லக்ஷியார்த்தமாம்.

இரண்டாவது பதம் 'துவம்' என்னும் ஜீவவாசகபதமாம். வியஷ்டி பஞ்சகோசங்களோடு கூடிய ஜீவன் இதன் வாச்சியார்த்தமாம், அதாவது ஆறு தத்துவமாகிய ஸ்தூல சரீரம் உம் தத்துவமாகிய சூக்ஷ்ம சரீரம், காரணசரீரமாகிய அவித்தை இதிற் பிரதிபிம்ப சைதன்னியம் இதற்கதிஷ்டானமாகிய கூடஸ்த சைதன்னியம் என்பவைகளாம். இவற்றுள் விரோதி பாகங்களாகிய வியஷ்டி பஞ்சகோசங்களையும் ஆபாசனையும் விட்டு சாக்ஷியாகிய கூடஸ்த சைதன்னிய மாத்திரம் லக்ஷியார்த்தமாம்.

மூன்றுவதுபதம் 'அசி' என்னும் பதமாம். அது முன்னிரண்டு பதங்களின் லக்ஷியார்த்தமாகிய பிர

ஹ்ம கூடஸ்தர்களின் ஏகத்துவத்தை அதாவது ஐக்கியத்தை போதிக்கின்றது. ஆகையால் பிரஹ்ம சொரூபமே நீயாயிருக்கின்றாய் அந்த பிரஹ்மாத்ம வடிவ அர்த்தத்தினது ஐக்கியம் உன்னால் அநுபவிக் கத்தக்கதாம்.

சுவாமி! தாங்கள் உபதேசித்த மஹாவாக்கியத்தால் எனது நிஜசொரூபமாகிய கூடஸ்தனும் ஈசுவரனது நிஜசொரூபமாகிய சுத்த பிரஹ்மமும், ஒன்றென்னும் நிச்சயம் எனக்குண்டாகியும் அந்த சமஷ்டி வியஷ்டி கோசங்களின் பேததோற்றம் என் புத்தியினின் றும் நீங்கவில்லை. அது நீங்கும் உபாயத்தை தேவ ரீர் கிருபைசெய்து உரைத்தருளல் வேண்டும் என விண்ணப்பம் செய்தான்.

குரு:—ஹே குழந்தாய்! ஜகத்தின் சத்தியத்துவ வாசனை உன் சித்தத்தில் திடமாக இருக்கிறபடியால் பேதத்தோற்றம் இன்னும் நீங்கவில்லையாகையால் அது நீங்கும் உபாயத்தைக் கூறுகின்றேன் கவன மாய்க் கேட்ப்பாயாக. பொன்னில் கற்பிக்கப்பட்ட பூஷணங்கள் பொன்னாகவே விளங்குவது போலும்,

மண்ணில் கற்பிக்கப்பட்ட கடாதிகள் மண்ணாகவே விளங்குவதுபோலும், உன் நிஜசொரூபத்தோடபேத மாகிய பிரஹ்ம சொரூபத்தில் கற்பிக்கப்பட்ட பிரபஞ்சங்களனைத்தும் பிரஹ்மமே என்னும் அந்த பிரஹ்மமே நானென்றும், நானே அந்த பிரஹ்ம மென்றும் சதாகாலமும் இடைவிடாது (நாமரூப விருத்தியின்றி) சிந்தனைசெய். இப்படி சிந்திக்கின்ற சிந்தனையே அகண்டாகார விருத்திஞானமாகிய நிற் விகற்பசமாதி உண்டாவதற்கு ஏதுவான சவிகற்ப சமாதி என்று சொல்லப்படும். உன்னுடைய இடை யீடின்றிய பிரயத்தினமுள்ள பரியந்தம் இது பரோ க்ஷஞானவடிவ சவிகற்ப சமாதி என்று சொல்லப்ப டும். இது நீண்டகால அப்பியாசத்தின் பரிபாக வசத்தாலும், புண்ணிய புஞ்ச பரிபாக வசத்தாலும், உன்னுடைய பிரயத்தினமின்றி தானே உண்டாகி றதோ அந்த அகண்டாகார விருத்தியே அபரோக்ஷ ஞானவடிவ நிற்விகற்பசமாதி என்று சொல்லப்படும்.

இந்த அபரோக்ஷ ஞானத்தினால் ஜகத்தாகிய காரியத்தோடுகூடிய அஞ்ஞானத்தின் நிவர்த்தியும் உனது நிஜசொரூபத்தின் வெளிப்பாடாகிய பரமா நந்தப் பிராப்தியும் சித்திக்கும்.

இதைக்கேட்ட சீடன் குருவை வணங்கி விடை பெற்று ஏகாந்த ஸ்தானத்தை அடைந்து வடக்கு முகமாக பத்மாசனத்தில் அமர்ந்து குரு உபதேசித்த வண்ணம் சவிகற்ப சமாதியை ஆதரவோடு அப்பிய சித்து பரிபாகத்தில் தனது பிரயத்தின மின்றிய (ஜீவபோதமிளர்ந்த) பிரஹ்மாகார விருத்தியோடு நிர்விகற்ப சமாதியை யடைந்தான்; அதாவது திட அபரோக்ஷ ஞானத்தைப்பெற்று சுத்த பிரஹ்ம சொரூபமாக நிலைத்தான்.

இப்படிச்சிலகாலம் சமாதியிலிருந்து விழித்துப் பார்த்த பொழுது தோற்றிய தேகாதி பிரபஞ்சமனை த்தையும் தன்னுடைய பிரஹ்ம சொரூபத்தில் எழுதப்பட்ட கற்பனை சித்திரங்களாகக்கண்டு ஜீவன முக்தனானான்; இப்படி ஜீவன்முக்தனாய் பிராரப்த பரியந்தம் தேசசஞ்சாரம் செய்து பிராரப்தமுடிவில் விதேகமோக்ஷத்தை பெற்றான். அதாவது ஜனன மரண மின்றியவனாய் சுத்த பிரஹ்ம சொரூபமாய் நிலைத்திருந்தான்.

இந்த நூலைச் சிரத்தையுடன் படிப்பவர்களும் கேட்பவர்களும் ஸ்ரீ பிரஹ்மாநந்த சுவாமிகளது கிருபையினால் பேரின்பத்தில் வாழ்வார்களாக.

ஸ்ரீ பிரஹ்மாநந்தாய நம:

முற்றிற்று.

## விற்பனைக்கு தயாராயுள்ள புத்தகங்கள்.

1. ஸ்ரீ பஞ்சதசி வாலியும் 1 & 2 ... 9—0—0
2. ,, விருத்திப்பிரபாகரம் ... 5—0—0
3. ,, விசாரசாகரம் ... 3—4—0
4. ,, விசாரசந்திரோதயம் 4-ம் பதிப்பு 1—8—0
5. ,, பாலபோதம் ... ... ... 1—8—0
6. ,, விருத்திரத்நாவலி ... ... 0-12—0
7. நாநாஜீவவாதக்கட்டளை குறிப்புரை... 0—4—0
8. ஷை ... (செய்யுள்)... 0—3—0
9 விவேகசிந்தாமணி ... 0—6—0
10. சங்கரநீலகண்டாசார்ய சம்வாதம் ... 0—6—0
11. ஹடயோகபிரதீபிகை ... ... 2—0—0
12. சிவயோகப்பிரதீபிகை ... ... 0-10—0
13. அபரோக்ஷானுபூதி-ச-கி 1-ம் புத்தகம் 0—8—0
14. ஆத்மபோதம் தத்துவபோதம் ... 0—8—0
15 பஞ்சீகரணமுதலியன 27 புத்தகங்கள் 1—0—0
16. குருபுஜங்கஸ்தோத்திரம் ... ... 0—4—0
17. பிரச்னோத்திர ரத்நமாலை ... ... 0—2—0
18. தருக்ககௌமுதி ... ... ... 0-10—0
19. சிவஞானபோதம் (உரையுடன்) ... 1—8—0
20. ஞானவாசிட்டம் வசனம் ... .. 1—4—0
21. கைவல்யோபநிடதம், அமிர்தபிந்தூப நிடதம், சுகரகசியோபநிடதம், ஸ்கந்தோபநிடதம் (செய்யுள்) ... 0—5—0
22. தத்துவமஸிமகாவாக்கியவுபதேசம். 0—3—0
23. சுருதிஷட்லிங்கசங்கிரகம் ... ... 0—8—0
24 ஸ்ரீ நந்திகேசுவரகாரிகை ... .. 0—4—0
25 உத்திரகீதை கீ. கொ. (1-ம் புத்தகம். 0—6—0
26. ஸ்ரீ ராமகீதை ஷை (2-ம் புத்தகம். 0—6—0

27. குருகீதை ஷை (3-ம் புத்தகம்) ராப்பர் 1—0—0
28. தேவீகீதை கி. கொ (4-ம் புத்தகம்) 0-12—0
29. பகவத்கீதை, கர்மகீதை, சப்தசுலோகி கீதை .. 1—4—0
30. கீதாசாரதாலாட்டு கி.கொ 6ம் புத்தகம் 0—6—0
31. சிவபஞ்சாக்ஷரவிளக்கம், ஸ்ரீ ராமமந்திரார்த்தம் ஸ்ரீ கணேசஷோடச நாமஸ்தவம் ... 0—4—0
32. வைஷ்ணவ அஷ்டாக்ஷரமந்திரார்த்த சங்கிரகம் ... ... 0—2—0
33. ஸ்ரீஜகத்குரு ஆதிசங்கராசாரியர் சரித்திரம் (செய்யுள்) ... ... 0—3—0
34. ஷை ஷை வசனம் ... 0—2—0
35. தஞ்சை ஸ்ரீ பிரம்மாநந்தஸ்வாமிகள் திவ்ய சரித்திரம் நான்மணிமாலை ... 0—8—0
36. பிரஹ்மவிதாசிர்வாத பத்ததி ... 0—2—0
37. பிரம்மநாமாவலி (செய்யுள்) ... 0—2—0
38. ஷை நாகரம் கார்டு ... 0—0—6
39. சங்கர வித்யாரண்யாஷ்டோத்திர சதநாமம், நா. கி. தமிழ் தனித்தனி. 0—2—0
40. குர்வஷ்டோத்திரசதநாமாவலி, நா. கி. தமிழ் தனித்தனி ... ... 0—3—0
41. நாருயணஸ்தோத்திரம் நா. கார்டு ... 0—6—0
42. நாமராமாயணமும், நாருயணஸ்தோத்திரமும் தமிழ் ... ... ... 0—1—0
43. காயத்ரீராமாயணம்-நாகரி .. 0—1—0
44. ராமாயணசூர்ணிகை, நா. த. தனித்தனி 0—1—0

மானேஜர், ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திரம்
வடக்குராஜவீதி, தஞ்சாவூர்.